நமது மொழி

ஆசிரியர் :
யாழ்ப்பாணத்து நவாலியூர்
திரு. ந. சி. கந்தையா பிள்ளை

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,
522, டி.டி.கே. சாலை, சென்னை – 18.

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	நமது மொழி
பொருள்	:	மொழியாய்வு
நூலாசிரியர்	:	திரு. ந.சி. கந்தையா பிள்ளை
பதிப்பாண்டு	:	2000
பதிப்பாளர்	:	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை - 18.
வெளியீட்டெண்	:	415
உரிமை	:	கழகம்
நூல் அளவு	:	1x8 Crown
அச்செழுத்து	:	11 புள்ளி
விலை	:	ரூ.25.00
தாள்	:	11.6 Kg.
பக்கங்கள்	:	88
கட்டமைப்பு	:	அட்டைக்கட்டு
கணிப்பொறி அச்சு	:	சூர்யா ஒளிஅச்சு, சென்னை - 33 போன் 474 4185
அச்சிட்டோர்	:	அப்பர் அச்சகம், சென்னை - 108

முன்னுரை

இன்று இவ்வுலகில் வழங்கும் மொழிகள் 7500 வரையில் ஆகும். இம்மொழிகள் எல்லாம் ஓர் அடிமரத்தினின்றும் கவர்விட்டுக் கிளைத்த கொம்புகளை ஒத்தன. மொழிகள் எல்லாவற்றையும் ஆராயுமிடத்து அவை எல்லாம் சில இனங்களில் அடங்குகின்றன. அவ்வினங்களும் பின்பு ஒரு தனிமொழியினின்றும் பிரிந்தனவாகக் காணப்படுகின்றன. அத் தனிமொழி எதுவென நீண்ட காலம் ஆராயப்பட்டது. இன்று மேல்நாட்டறிஞர்கள் செய்துள்ள ஆராய்ச்சிகளை எல்லாம் ஒருங்குவைத்து நோக்குவோமாயின், தமிழ்மொழியே அம் மொழி அல்லது அதற்கு அண்மையிலுள்ளதெனத் தெரிகின்றது. இக்கருத்து வெறுங் கற்பனையன்று; மேல்நாட்டறிஞராலேயே ஆராய்ந்து கூறப்பட்டது. அக்கருத்துகளைத் தழுவி இந்நூல் எழுதப்படலாயிற்று. மேல்நாட்டு ஆராய்ச்சியாளர், தமிழ் மிகத் திருந்திய முதியமொழி என்றும், தமிழரின் நாகரிகம் மிகப் பழைமையுடையதென்றும் ஆராய்ந்து காட்டி வருகின்றனர். நாமோ நமது பெருமையை அறியாதவர்களாக விருக்கின்றோம். மக்கள் தோன்றிய காலத்தே தோன்றி இன்று வரையில் உலக வழக்கொழியாது இருந்து வருகின்ற தமிழின் பழைமையையும் பெருமையையும் உணர்ந்து அம்மொழியை ஓம்புவது நம் எல்லோருடைய கடமையுமாகும். இவ்வுணர்ச்சி பற்றியே இந்நூல் எழுவதாயிற்று. இவ்வுணர்ச்சிகொண்டு உழைத்து வரும் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் நன்முயற்சி பெரிதும் போற்றத்தக்கது.

சென்னை
1-5-46

ந.சி. கந்தையா

உள்ளுறை

		பக்கம்
1.	தோற்றுவாய்	1
2.	மொழி எவ்வாறு தோன்றியது?	2
3.	எழுத்துக்கள்	4
4.	ஆதிமொழி	6
5.	பழைய தமிழகம்	7
	இந்திய நாடு முழுமையிலும் தமிழ் வழங்குதல்	8
6.	ஆரியர் வருகை	9
	ஆரியர் தமிழர் கலப்பு	11
7.	வடக்கே வழங்கிய தமிழ் மாறுபடுதல்	11
8.	சமக்கிருதம்	13
9.	சமக்கிருத எழுத்துகள்	14
	ஆந்திர மொழி	16
10.	பிற்காலத் தமிழகம்	17
	1. செந்தமிழ் நாடு	
	2. இயற்சொல்	
	3. திசைச்சொல்	
	4. திரிசொல்	
11.	வடசொல்	19
12.	கொடுந்தமிழ்	20
	இலக்கணம்	

13. **தமிழ் என்னும் பெயர்** 22

14. **தமிழ்மொழிபற்றிய பழங்கதைகள்** 24

15. **முத்தமிழ்** 25

1. நாடகத் தமிழ்
2. இசைத்தமிழ்
3. இயற்றமிழ்
4. இருவகை வழக்கு

16. **தமிழ்ச் சங்கம்** 31

17. **சங்க வரலாறு** 32

1. தலைச்சங்கம்
2. இடைச்சங்கம்
3. கடைச்சங்கம்

18. **சங்க நூல்கள்** 35

சங்க நூல்களில் கூறப்படும் பொருள்கள்

19. **நீதி நூல்கள்** 38

20. **புத்த சைன காலம்** 40

சைவ வைணவ எழுச்சி

21. **புராண காலம்** 43

மணிப்பிரவாள நடை

22. **மடாதிபதிகள் காலம்** 45

1. உரை ஆசிரியர்கள்
2. மடாதிபதிகள் காலத் தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சியடைந்ததற்குக் காரணம்

23. வசன காலம் **47**

தொடக்கத்தில் தமிழ்மக்கள்
ஆங்கிலம் கற்க மறுத்தல்

24. தமிழ்க் கிளர்ச்சி **50**

முற்கால நடையும் இக்கால நடையும்

25. தமிழ்ப்புலவர்கள் சிலர் **53**

1. அகத்தியர்
2. தொல்காப்பியர்
3. திருவள்ளுவர்
4. நக்கீரர்
5. இளங்கோவடிகள்
6. சீத்தலைச் சாத்தனார்
7. திருத்தக்கதேவர்
8. குண்டலகேசி
9. நீலகேசி
10. கொங்குவேள்
11. பவணந்தி
12. கச்சியப்ப சிவாசாரியர்
13. சேக்கிழார்
14. ஔவை
15. கம்பர்
16. ஒட்டக்கூத்தர்
17. புகழேந்தி

முக்கிய காலக் குறிப்புகள்

நமது மொழி

1. தோற்றுவாய்

நாம் பேசும் மொழி தமிழ். அதைப்பற்றி நாம் எல்லாரும் நன்கு அறிந்துகொள்ளுதல் வேண்டும். ஆதியில் உலகில் ஒரு மொழியே வழங்கிற்று. பின்பு அம் மொழியைப் பேசிய மக்கள் பல திசைகளிலும் பிரிந்து சென்றார்கள். அவர்கள் தனித்தனிப் பகுதியினராகப் பெருகினார்கள். அவர்கள் பேசிய மொழியின் சொற்கள் உச்சரிப்பு முறையில் சிறுகச் சிறுக மாற்றம் அடைந்தன.

இம் மாற்றம் எல்லாக் கூட்டத்தினரிடையும் ஒரே வகையாக நிகழவில்லை; வெவ்வேறு வகையாக நிகழ்ந்தது. அதனால் ஆதியில் வழங்கிய ஒரு மொழியே நீண்டகாலச் செலவில் பல மொழிகளாக மாறியுள்ளது. ஒவ்வொரு கூட்டத்தினரும் தமக்கும் மற்றவர்களுக்கும் உள்ள தொடர்பை மறந்தார்கள். ஆகவே, அவர்கள் தாம் மற்றவர்களோடு தொடர்பற்ற தனி வகுப்பினர் எனக் கருதலானார்கள். இவ்வாறு உலகில் பல மொழிகளும் பல மக்கட் பகுப்புகளும் தோன்றின.

மொழிகள் மக்கள் வரலாற்றை நன்கு அறிவிப்பன வாகும். ஒரு கூட்ட மொழிகள் ஒரே தொடக்கத்தைச் சேர்ந்தனவாகக் காணப்படின் அம்மொழிகளைப் பேசும்

மக்கள் எல்லாரும் ஒரு கூட்டத்தினராக வாழ்ந்தார்கள் எனக் கொள்ளலாம். இன்னொரு கூட்டமொழிகளின் ஆதிமொழிக்கும் இவ்வாதி மொழிக்கும் ஒற்றுமை காணப்பட்டால், இரு ஆதிமொழிக்குரிய மக்கள் நெடுநாட்களுக்கு முன் ஒன்றாக வாழ்ந்து பின்பு இரண்டாகப் பிரிந்தனர் எனக் கருதலாம்.

இவ்வாறு ஆராயின் மக்கள் எல்லாரும் ஒரு பொதுக் கூட்டத்தினின்றும் பெருகியவர்களாகக் காணப்படுவர்; மொழிகள் எல்லாம் ஒரு பொது மொழியினின்றும் பிரிந்தனவாகக் காணப்படும். 'ஆதி' மக்கட் கூட்டத்தினர் யாவர்? ஆதிமொழி யாது? என்பன நீண்டகாலமாக ஆராயப்படலாயின. ஆதி மக்கள் தமிழர் என்பதும், ஆதிமொழி தமிழ் என்பதும் இக்கால ஆராய்ச்சிகளால் உறுதிப்படுகின்றன. இவை பலருக்கு வியப்பைத் தருவனவாகும். இவ்வியப்புக்குரிய இரண்டனுள் மொழியைப்பற்றிய வரலாற்றை இச் சிறிய நூலிற் படிப்போம்.

2. மொழி எவ்வாறு தோன்றியது?

நமது மொழியைப்பற்றிப் படிக்குமுன் மொழி எவ்வாறு உண்டாயிற்று என்று நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும். ஒருவர் எண்ணத்தை மற்றவருக்கு அறிவிக்க விரும்பும் இயல்பான உணர்ச்சி மக்கள் இடையே உண்டு. ஆகவே, ஆதிமக்கள் தம்முடைய எண்ணங்களை மற்றவர்களுக்கு அறிவித்தற்குப் பெரிதும் முயன்றனர். இம் முயற்சியினா

லேயே மொழி உண்டாயிற்று. ஆதியில் பொருள்களையும் செயல்களையும் தொழில்களையும் உணர்த்தும் ஒலிக் குறிகளாகிய சொற்கள் உண்டாயிருக்கவில்லை. ஆகவே, அவர்களின் மொழி, பார்வை, முகக்குறி, உடல்நிலை, கைக்குறி போன்ற நடிப்பு முறையளவில் இருந்தது. வாய் பேசமாட்டாத ஊமன் ஒருவன் பேசுவதைச் சிறிது நோக்கினால் இது நன்கு விளங்கும்.

மனிதனின் மொழி நடிப்பு அளவில் நீண்டகாலம் இருக்கவில்லை. அவனைச் சூழ்ந்து பலவகைப் பறவைகள் இருந்தன; விலங்குகள் நடமாடின; இவை வெவ்வேறு வகையாகச் சத்தமிட்டன. காற்று, இடி, ஆறு, மலை போன்ற இயற்கைப்பொருள்களினின்றும் வெவ்வேறு ஒலிகள் பிறந்தன. இவற்றை எல்லாம் ஆதிகால மனிதன் உற்றுக் கேட்டான்; எவ்வெவ்வொலிகள் பொருள்களினின்று எழுந்தனவோ அவ்வவ்வொலிகளையே அவ்வப் பொருள்களுக்குப் பெயர்களாக இட்டு வழங்கினான். அவ்வகைப் பெயர்களை இன்றும் நாம் மொழிகளில் காணலாம். கா!கா! எனக் கரையும் பறவை காகம் எனப்பட்டது. கூ!கூ! எனக் கூவும் பறவை குயில் எனப்பட்டது. மா!மா! என அழைக்கும் விலங்கு மாடு எனப்பட்டது. இவை முன் கூறியவைகளுக்குச் சில எடுத்துக்காட்டுகளாகும். பின்பு ஒவ்வொரு பொருளின் குணங்களையும் அறிந்து பெயர் இடப்பட்டது.

இவ்வாறு நடிப்பு அளவில் இருந்த மொழி நாளடைவில் ஒலிக்குறிகள் கலந்த மொழியாகமாறிற்று. நாளடைவில் மக்கள் தாம் கண்டு அறிந்த ஒவ்வொரு பொருளின்

செயல்களுக்கும் குணங்களுக்கும் ஒலிக்குறிகளை இட்டு வழங்கலானார்கள். இவ்வாறு மக்கள் ஆதியில் வழங்கிய ஒலிக்குறிகள் தலைமுறை தலைமுறையாக வந்தன. மேலும் மக்கள் புதியனவாகக் கண்டு அறிந்த பொருள்களையும் செயல்களையும் குறிக்கப் புதிய ஒலிக் குறிகளையும் வழங்கலாயினர். இவையெல்லாம் பழைய ஒலிக் குறிகளோடு சேர்ந்து பெருகின. இவ்வாறு மொழி வளர்வதாயிற்று.

ஒரு மரத்தில் புதிய கிளைகள் தோன்றி வளரப் பழைய கிளைகள் சில பட்டுப்போதலும் இயல்பு. அதனை ஒப்பப் பழைய சொற்கள் பல வழக்கு ஒழிய, அவைகளின் இடத்தைப் புதிய சொற்கள் ஏற்றதும் உண்டு. மக்களிடையே தோன்றி வளரும் எல்லாப் பெரிய கலைகளும் இவ்வாறு மிகச் சிறிய தொடக்கத்தினின்றே வளர்ச்சி எய்தின.

3. எழுத்துகள்

பேச்சினால் மக்கள் அருகே உள்ளவர்களுக்கு மாத்திரம் தம் எண்ணங்களை அறிவித்தல் கூடும்; சேய்மையில் உள்ளவர்களுக்கு அறிவித்தல் முடியாது. ஆகவே, மக்கள் தம் எண்ணங்களைச் சேய்மையிலுள்ளவர்களுக்கு அறிவிக்கும் வழியைக் கண்டுபிடிக்க முயன்றார்கள். இம் முயற்சியினால் எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆதியில் மக்கள் தம் எண்ணங்களை விளக்க ஓவியங்களைப் பயன்படுத்தினர். காலை உணர்த்த மனிதனின் காலையும், கண்ணை

உணர்த்தக் கண்ணையும், மனிதனை உணர்த்த மனிதனையும் எழுதிக் காட்டுதல் போல்வன ஓவிய எழுத்துக்கு எடுத்துக்காட்டுகளாகும். ஓவிய எழுத்துகள் படிப்படியே வளர்ச்சியடைந்து உயர்நிலையடைந்தன. ஓவிய முறையாக எழுதுதல் மிகவும் வருத்தமுடையது. ஓவிய எழுத்துகளால் உச்சரிப்பு முறையான சொற்களைத் தோற்றுவித்தல் முடியாமல் இருந்தது. பின்பு மக்கள் ஒவ்வொரு முழுச் சொல்லையும் உச்சரிப்பு முறையாக உணர்த்த ஒவ்வொரு குறியீடுகளைக் கண்டுபிடித்தனர். ஆகவே, மொழியில் எத்தனை சொற்கள் இருந்தனவோ அத்தனை குறியீடுகளும் இருந்தன. இன்றும் சீனமொழியின் எழுத்துகள் இவ்வகையினவே.

மொழியில் எழுத்துக்குறி பலவாயிருந்தமையின் அவைகளைப் பயில்வது மிகக் கடுமையாயிருந்தது. ஆகவே, மக்கள் அதனிலும் எளிதான இன்னொரு முறையைக் கண்டுபிடித்தார்கள். அவர்கள் மொழியிலே எத்தனை வகையான வெவ்வேறு ஒலிகள் இருக்கின்றன என்று சொற்களை உச்சரித்துப் பார்த்தார்கள். ஒவ்வொரு ஒலியைக் குறிக்கவும் ஒவ்வொரு குறியீடு அமைத்தார்கள். ஒரு சொல்லை ஒலிமுறையாக எழுதவேண்டின் அச்சொல்லின் உச்சரிப்புக்கு ஏற்ற ஒலிக்குறிகளை அடுக்கிவைத்தார்கள். இவ்வாறு எழுத்துகள் உண்டாயின. இம்முறையில் அமைந்தனவே எல்லா மொழிகளிலும் காணப்படும் இன்றைய எழுத்துகள்.

4. ஆதிமொழி

மொழி எவ்வாறு தோன்றி வளர்ச்சியடைந்தது என்று படித்தோம். மொழித் தோற்ற வளர்ச்சிகளைப் பற்றிய வரலாற்றால், தொடக்கத்தில் ஒரு மொழியே தோன்றி யிருத்தல் கூடுமென்பது நன்கு விளங்குகின்றது. அவ்வாதி மொழியின் நேர்தொடர்பில் சிறிது வேறுபாடுடன் உள்ள மொழி காணப்படுகின்றதா என்று ஆராய்வோம். ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து காட்டிய முடிவுகளை ஒருங்குவைத்து ஆராயுமிடத்து அம்மொழி தமிழ் என்பது தெரியவருகின்றது. அது எவ்வாறு என அறிந்து கொண்டால்மாத்திரம் நீங்கள் யாம் கூறுவதை நம்புவீர்கள். ஆகவே, அதனை இங்குச் சிறிது விளக்கிக் கூறுகின்றோம்.

இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளின் முன், சிந்து ஆற்று ஓரங்களில் புதைந்து கிடந்த இரண்டு பழைய நகரங்கள் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்டன. அந்நகரங்கள், ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்கள் வாழ்ந்தவை என ஆராய்ச்சியாளர் நன்கு துணிந்து கூறியுள்ளார்கள். அங்கு ஒருவகைச் சுண்ணாம்புக் கற்களில் வெட்டிய சதுரவடிவான முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அம் முத்திரைகளின் மீது வியப்பைத் தரக்கூடிய அழகிய உருவங்களும் வெட்டப்பட்டிருக்கின்றன. அவ்வெழுத்துகள் மேற்கு ஆசியாவிலே ஊர், சுசா, லகாஷ் முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளிற் பொறிக்கப்பட்ட எழுத்துகளை ஒத்துள்ளன. இவ்வகை எழுத்துகள் கிழக்குத் தீவுகளிலும் கிரேக்க நாட்டுக்கு அயலேயுள்ள கிரேத்தா

என்னும் தீவிலும் காணப்பட்டன. இவைகளைக் கொண்டு கிழக்குத் தீவுகள் முதல் மேற்கு ஆசியா எகிப்து வரையில் ஒரேவகை எழுத்து வழங்கிற்று என்பது துணியப்பட்டது. சுமேரியா மொழியில் எழுதப்பட்டுள்ள பட்டயங்கள் வாசிக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி நகரங்களிற் கண்டு பிடிக்கப்பட்ட முத்திரைகளில் உள்ள எழுத்துகளும் சுமேரிய எழுத்துகளை ஒத்திருந்தமையின், அவ்வெழுத்துகளின் உதவியைக் கொண்டு இம் முத்திரை எழுத்துகளும் வாசிக்கப்பட்டன. ஒலி முறையாக வாசிக்கப்பட்டவை இன்றும் நாம் தமிழ் மொழியில் வழங்கும் சொற்களாகக் காணப்படுகின்றன. இதனால் உலகின் எல்லாப் பாகங்களிலும் தமிழ் வழங்கிற்று எனவும், ஆதிமொழி தமிழ் எனவும் துணியப்படுகின்றன. இவ்வாறு ஆராய்ந்து முடிவு கண்டவர்கள் கீழ் நாட்டவர்களல்லர்; மேல் நாட்டவர்களே.

5. பழைய தமிழகம்

இன்றைய தமிழகம் பழைய தமிழகத்தின் ஒரு பகுதி எனத் தெரிகின்றது. பழைய தமிழ் நூல்களும் அதன் உரைகளும், தமிழகத்தின் சிறந்த பகுதி கன்னியாகுமரிக்குத் தெற்கில் இருந்ததென்றே கூறுகின்றன. குமரிமுனைக்குத் தெற்கே பெரிய நிலப்பரப்பு இருந்தது. அங்கு குமரி, பஃறுளி என்னும் பெரிய ஆறுகள் பாய்ந்தன. அங்கு மணிமலை முதலிய மலைகளும் இருந்தன. அங்கு ஆறுகளால் நீர் பாய்ச்சப்பெற்ற நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன. பனை நாடு, தெங்கு நாடு என்பன அவைகளுட் சில. பனை நாடு

என்பது கடைசியிற் கடலாற் கொள்ளப்பட்டதெனத் தெரிகின்றது. குமரி முனைக்குத் தெற்கே இருந்த பெரிய நிலப்பரப்பைப் பெருவள நாட்டில் இருந்து செங்கோ என்னும் பேரரசன் ஒருவன் ஆண்டான். அவன்மீது பாடப்பட்ட நூலின் ஒரு பகுதி கிடைத்துள்ளது. அந்நூல் செங்கோன் தரைச்செலவு எனப்படும். அந்நூலில் செங்கோன் என்னும் அரசன் தமிழ்ப்புலவர் கழகம் கூட்டி நடத்தினான் என்பது கூறப்பட்டுள்ளது. செங்கோன் தரைச்செலவு என்னும் நூல் செவ்விய தமிழால் ஆக்கப்பட்டிருத்தலின் குமரிமுனைக்குத் தெற்கே செந்தமிழ் வழங்கிற்று என்பது நன்கு துணியப்படுகின்றது. காலத்துக்குக் காலம் நேர்ந்த பெரிய எரிமலைக் குழப்பங்களால் தெற்கே கிடந்த பெருந்தரை சிறிது சிறிதாகக் கடலுள் மறைவதாயிற்று. எகிப்து, மேற்கு ஆசியா முதலிய நாடுகளிற் காணப்படுவன போல மிகப் பழைய அழிபாடுகள் தென்னிந்தியாவிற் காணப்படவில்லை. இதற்குக்காரணம் தமிழர் நாகரிகச் சின்னங்கள் பெரும்பாலும் கடலுள் மறைந்தமையேயாகும்.

இந்திய நாடு முழுமையிலும் தமிழ் வழங்குதல்

சிந்துவெளிப் பழைய நகரங்களாகிய அரப்பா, மொகஞ்சொதரோ என்னும் நகரங்களில் தமிழ் வழங்கிற்று என்று முன் ஓர் இடத்தில் படித்தோம். அக்காலத்தில் இந்திய நாட்டில் வேறு மொழி வழங்கவில்லை. தென்னிந்தியாவிலே திருநெல்வேலிப் பக்கங்களில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட சமாதிகள் தோண்டிக் கண்டுபிடிக்கப்

பட்டன. அச் சமாதிகளுக்குள் அக்கால மட்பாண்டங்கள் காணப்பட்டன. அவைகளில் சிந்துவெளியில் காணப் பட்டவை போன்ற எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. ஹைதராபாத்தில் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்ட சமாதிகளில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களிலும் அவ்வகை எழுத்துகள் காணப்பட்டன. இலங்கையிலே கேகாலை என்னும் இடத்திலுள்ள மலை ஒன்றிலும் அவ்வகை எழுத்துப் பொறிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளை எல்லாம் ஒருங்குவைத்து ஆராயுமிடத்து இமயமலை முதல் இலங்கை வரையில் ஒரு மொழியே ஒரு காலத்தில் வழங்கிற்று என்பது நன்கு தெரிகின்றது.

6. ஆரியர் வருகை

நாலாயிரம் ஆண்டுகளின் முன் ஆரியர் என்னும் ஒரு மக்கட் கூட்டத்தினர் கைபர்க் கணவாய் வழியாக இந்தியநாட்டை அடைந்தனர். முதலில் நாம் இவர்களைப் பற்றிச் சிறிது அறிந்துகொள்ளுதல் வேண்டும். ஆதியில் தோன்றிய மக்கள் கறுப்பு அல்லது மங்கிய நிறமுடையவர்களாயிருந்தார்கள். அதற்குக் காரணம் அவர்கள் வெப்ப நாட்டில் தோன்றி வாழ்ந்தமையாகும். இம் மக்கட் கூட்டத்தினின்றும் பிரிந்து சென்ற மக்கள் மேற்கு ஆசியா, சிறிய ஆசியா முதலிய மத்தியதரை நாடுகளிற் குடியேறினார்கள். மேல்நாட்டு மக்கள் நூலார், மேற்கு ஆசிய மக்கள் திராவிடர் ஆகியோரை மத்தியதரை மக்கட் பிரிவில் அடக்கிக் கூறுவர். மத்தியதரை மக்களில் ஒரு

பிரிவினர் வடக்கே துருவநாடு வரையும் சென்று அங்குத் தங்குவாராயினர். குளிர் மிகுந்த நாடுகளில் மக்கள் உறைந்தால் அவர்களின் நிறம் வெண்மை அடையும். அவர்கள் நீண்ட காலம் குளிர் மிகுந்த துருவ நாடுகளில் வாழ்ந்தமையின் வெண்ணிறம் எய்தினர். இவ்வுலகத்தில் ஒருகாலத்தில் மக்கள் வாழ்க்கைக் கேற்றனவாயிருந்த இடங்கள் இன்னொரு காலத்தில் மக்கள் வாழ முடியாத இடங்களாக மாறியதுண்டு. இதுபோன்ற யாதோ இயற்கை மாறுதலால் துருவ நாடுகளில் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் கஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும் இடையிலுள்ள நாடுகளில் வந்து தங்கி வாழ்ந்தனர். அவர்கள் ஆடு மாடுகளை மேய்த்து அவை தரும் பால், நெய், இறைச்சி போன்ற பயன்களைக் கொண்டு வாழ்ந்தனர். ஒருபோது நீண்டகாலம் மழை பெய்யவில்லை. அதனால் அவர்களின் ஆடு மாடுகள் மேய்வதற்குப் புல் கிடைக்கவில்லை. ஆகவே, அவர்கள் புற்றரைகளை நாடித் தம் குடும்பங் களுடனும், கூடாரங்களுடனும், மந்தைகளுடனும், பல திசைகளிலும் சென்றனர். அவ்வாறு சென்ற மக்களுள் ஒரு கூட்டத்தினர் இந்திய நாட்டை அடைந்தனர்; பின்பு இவர்கள் காற்சுவட்டைப் பின்பற்றி அலை அலையாகப் பல கூட்டத்தினர் வந்து அடைந்தார்கள்.

ஆரியர் தமிழர் கலப்பு

ஆரியர் இந்திய நாட்டை அடைந்த போது அங்கு வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் தமிழராவர். அவர்களின் தொகை வந்தவர்கள் தொகையைவிட மிகப்பெரியதாகும். புதிதாக

வந்த ஆரியர் தமிழர்களுடன் நீண்ட காலம் போராடினர். இறுதியில் ஆரிய வெள்ளம் தமிழ் வெள்ளத்துடன் கலந்து ஒன்றுபட்டது. இரு இன மக்களின் கலப்பினால் புதிய மக்கள் தோன்றுவாராயினர். அப் புதியோர் இந்தியத் தாயாருக்கும் ஐரோப்பியத் தந்தையருக்கும் தோன்றிய ஆங்கிலோ இந்தியர் போன்ற மக்களாவர். இன்று ஆங்கிலோ இந்தியர் தம்மை இந்தியரிலும் பார்க்க ஐரோப்பியரைச் சார்ந்தவர்கள் எனக் கருதுகின்றார்கள். அதனை ஒப்பவே கலப்புச் சாதியினராகிய புதிய மக்கள் தம்மை ஆரியர் எனக் கருதுவாராயினர். இவர்கள் தமிழருக்குரிய வழக்கங்கள் கொள்கைகள் பலவற்றையும் ஆரியருக்குரியவை சிலவற்றையும் கைக்கொள்வாராயினர். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன் இமயமலைக்கும் விந்திய மலைக்கும் இடையில் இவ்வகைமக்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் அவ்வெல்லைகளுக்கு இடைப்பட்ட நாடுகளை ஆரியவர்த்தம் எனக் கூறினர்.

7. வடக்கே வழங்கிய தமிழ் மாறுபடுதல்

ஆரியரின் மொழி பிராகிருதம் எனப்பட்டது. இம்மொழிக்கும் திராவிட மொழிக்கும் மிகச் சேய்மையான உறவு உண்டு என மொழி ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதனால் ஆரியரின் முன்னோரும் திராவிடரின் முன்னோரும் ஒரு காலத்தில் ஒரே கூட்டத்தினர்களாக வாழ்ந்தவர்களே என்பது தெரிகின்றது. பின்பு ஆரியக் கூட்டத்தினர் நீண்டகாலம் குளிர் மிகுந்த நாடுகளில்

வாழ்ந்தமையினால், அவர் முன் வ்ழங்கிய தமிழ் மொழியே சிறிது சிறிதாக மாறுதல் அடைந்து எளிதில் ஒற்றுமை காண முடியாதபடி ஆரியமாக மாறிற்று.

ஆரியர் தமிழர் கலப்பினால் தோன்றிய புதிய மக்கள், ஆரியம் தமிழ் என்னும் இரு மொழிச்சொற்களையும் பிழைபட உச்சரித்தும் கலந்தும் வழங்கத் தலைப்பட்டார்கள். இவ்வாறு வழங்கிய மொழி சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்தது. இன்று தமிழ் மொழி ஒன்றே கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் என்னும் மொழிகளாக மாறியுள்ளது. இதனை ஒப்பப் புதிதாகத் தோன்றிய கலப்புமொழியும் பல மொழிகளாக மாறுதல் அடைந்தது.

வட இந்திய மொழிகள் எல்லாவற்றின் இலக்கண அமைப்பும் தமிழ் இலக்கண அமைப்பை ஒத்தது. ஒரு மொழியின் இலக்கணம் ஆற்றின் இரு அணைகளைப் போன்றது; அதன் சொற்கள் அணைகளிடையே ஓடும் நீரை ஒத்தன. சொற்கள் காலந்தோறும் மாறுபடலாம்; இலக்கணம் மாறுபடாது. இதனால் வடநாட்டில் வழங்கிய தமிழே பல வடமொழிச் சொற்களையும், அவற்றின் சிதைவுகளையும், தமிழ்மொழியின் சிதைவுகளையும் ஏற்றுக்கொண்டு இந்தி, வங்காளி முதலிய பல மொழிகளாக மாறியுள்ளதென்பது நன்கு விளங்குகின்றது.

8. சமக்கிருதம்

ஆரியர் வழங்கிய பிராகிருதம் வழக்கொழிந்தது. ஒரு மொழி வழக்கொழிந்து இறந்துபோவதற்குச் சில காரணங்கள் உண்டு. ஒரு மொழி சிறிது சிறிதாக மாறுபட்டு வரும். காலப்போக்கில், பழைய சொற்கள் எல்லாம் வழக்கில் இல்லாது போக, அச் சொற்களின் சிதைவுகளும் புதிய சொற்களும் புது மொழியின் வடிவை அடையும். அப்பொழுது பழையமொழி விளங்கிக்கொள்ள முடியாததாய் இலக்கிய மொழியாக மட்டில் நிலைபெறும். அம்மொழியில் எழுதப்பட்ட பழைய இலக்கியங்களைக் கற்கவேண்டியே மக்கள் இறந்துபோன மொழியைப் பயில்வர். இந்நிலையில் உள்ளனவே பிராகிருதம் (அதன் திருத்தமாகிய) சமக்கிருதம், இலத்தின், கிரேக்கு, எபிரேயம் முதலிய மொழிகளாகும்.

பிராகிருதம் இலக்கண வரம்புசெய்து திருத்தி அமைக்கப்பட்டுச் சமக்கிருதம் எனப்பட்டது. சமக்கிருத மொழி ஒரு காலத்திலும் பேசப்படவில்லை. அஃது இலக்கிய மொழியாகவே இருந்தது. தென்னாட்டினின்றும் வடநாடு சென்ற திராவிட மக்களே பெரும்பாலும் சிறந்த சமக்கிருத நூல்களைச் செய்தார்கள். வடநாட்டவரின் நீதி நூல்களைச்செய்த போதாயனர், ஆபஸ்தம்பர் முதலானோர் ஆந்திர நாட்டினின்றும் சென்ற திராவிடரேயாவர். வடமொழியில் சிறந்த அருத்த நூல் செய்த சாணக்கியர் காஞ்சீபுரத்தினின்றும் சென்ற தமிழராவர். பாணினி முனிவர் செய்த பாணினீயம் என்னும் இலக்கண நூலுக்கு விரிவுரை

எழுதிய கார்த்தியாயனர் என்பாரும் ஆந்திர நாட்டினராவர். பிற்காலத்தும் சமக்கிருத மொழியைக் கற்று அம்மொழியில் சிறந்த நூல்கள் இயற்றி அதனைப் புகழ்பெறச் செய்தார் தமிழ் மரபிலுள்ளோரேயாவர்.

தென்னாட்டு மக்கள் சமக்கிருதத்தைப் பயின்று அம் மொழியில் அரிய நூல்களைச் செய்தனர். ஆகவே, சமக்கிருதம் தென்னாட்டு உயர்ந்த மக்களுக்கும் விளங்கும் இலக்கிய மொழியாக இருந்து வந்தது. எப்படி இந்திய மக்கள் எல்லாருக்கும் இன்று ஆங்கிலம் பொதுமொழியாக இருக்கின்றதோ அவ்வாறு சமக்கிருதமும் இந்திய மேன்மக்களின் பொதுமொழியாகச் சிலகாலம் இருந்து வந்தது. பின்பு அது கடவுள் மொழி எனக் கொள்ளப்பட்டு ஆலயங்களிலும் சமயச் சடங்குகளிலும் புகுந்து நிலை பெற்றது. இக்காரணங்களால் தமிழில் சிற்சில வடமொழிச் சொற்கள் நுழையலாயின. இதனை இன்று நாம் ஆங்கிலச் சொற்கள் சிலவற்றைத் தமிழுடன் கலந்து பேசுவதற்கு ஒப்பிடலாம். வடசொற்களைத் தமிழுடன் கலக்கும் வழக்கு முதன்முதல் உயர்ந்த வகுப்பினரிடையே தொடங்கிற்று.

9. சமக்கிருத எழுத்துகள்

ஆரிய மக்கள் இந்திய நாட்டை அடைந்தபோது எழுத்து எழுத அறியாதிருந்தனர். அவர்கள் சில காலத்தின் பின் எழுத்து எழுதும் முறையை அங்கு வாழ்ந்த தமிழரிடம் இருந்து அறிந்துகொண்டனர். அவர்கள் மொழியில் தமிழிற் காணப்படாத பல ஒலிகள் இருந்தன. மக்கள் மொழிகளில்

ஒலி வேறுபாடுகள் உண்டாவதற்கு முக்கிய காரணம் மக்கள் வாழும் இடங்களின் வெப்ப தட்ப நிலையாகும். வெப்ப நாடுகளில் வாழும் மக்களின் ஓசைக்கும் குளிர் நாடுகளில் வாழும் மக்களின் ஓசைக்கும் பெரிய வேறுபாட்டைக் காணலாம். ஆங்கிலேயன் ஒருவன் பேசும்போதும், இந்தியன் ஒருவன் பேசும்போதும் உண்டாகும் ஓசைகளைக் கவனித்துக் கேளுங்கள்.

ஆரிய மக்கள் நீண்டகாலம் குளிர் நனி மிகுந்த நாடுகளில் வாழ்ந்தார்கள். அதனால் அவர் பேசிய மொழியின் ஓசைகள் இடத்துக்கு ஏற்றவாறு மாறுதலடைந்தன. மொழிகளுக்கு எழுத்துகள் எவ்வாறு அமைக்கப்பட்டன என்பதை நாம் முன் ஓரிடத்திற் படித்தோம். அவ் விதியைத் தழுவிச் சமக்கிருத மொழிக்கும் எழுத்துகள் அமைக்கப்பட்டன.

சமக்கிருத நூல்கள் ஆதியில் பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டன. பிராமி எழுத்து அரப்பா, மொகஞ்சொதரோ எழுத்துகளின் திரிபாகும். எழுத்து அமைக்கும் முறையிலும் பிறவகையிலும் வடமொழியாளர் தமிழருக்குப் பெரிதும் கடமைப்பட்டவர்களாவர். பாணினிமுனிவர் செய்த பாணினீயம் என்னும் இலக்கணம் பிராமி எழுத்தால் எழுதப்பட்டது. பிற்காலங்களில் சமக்கிருத நூல்கள் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டன. தேவநாகரி என்பதற்குத் தேவ நகரில் வழங்குவது என்பது பொருள். தேவநாகரி பிராமி எழுத்தினின்று தோன்றியது. சமக்கிருதம் தேவமொழி என்னும் பொய்யான நம்பிக்கை மக்களிடையே எழுந்த பின்னரே தேவநாகரி என்னும் பெயர் உண்டாயிருத்தல் வேண்டும்.

ஆந்திர மொழி

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டு வரையில் விந்திய மலைக்குத் தெற்கே குமரிமுனை வரையில் தமிழ்மொழி மட்டில் வழங்கிற்று. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளின் முன், கௌதம புத்தர் தோன்றி ஆரியரின் வேதமார்க்கத்துக்கு எதிரான புத்தமதக் கொள்கைகளை மக்களுக்கு அறிவுறுத்தினார். அவர் கொள்கைகளை மக்கள் பின்பற்றுவாராயினர். புத்த மதக் கொள்கைகளை முதலிற் பின்பற்றினோர் கலிங்கநாட்டு மக்களாவர். கலிங்க நாடு என்பது இப்பொழுதுள்ள ஒரிசா மாகாணத்தில் அடங்கும். புத்தர் தமது மத போதனைகளை மகத மொழியில் (பாலி) போதித்தார். அப் போதனைகள் அம்மொழியிலேயே எழுதப்பட்டன. ஆகவே, புத்த சமயத்தைத் தழுவிய கலிங்க நாட்டு மக்கள் பாலிமொழியைப் பெரிதும் பயின்றனர். நாளடைவில் பாலி மொழிச்சொற்களும் அவைகளின் சிதைவுகளும் தமிழுடன் கலந்தன. தமிழ்ச் சொற்களும் சிறிது சிறிதாக உச்சரிப்பு வேறுபாடு அடைந்தன. இதனால் கலிங்க நாட்டில் வழங்கிய தமிழ் வேறுபட்டு ஆந்திரம் எனப் பெயர்பெற்றது. தெலுங்கு, வடுகு என்பனவும் அதற்கு உரிய பெயர்கள். வடுகு என்பதற்கு வடக்கே உள்ள மொழி என்பது பொருள். இம் மொழி புதியதாதலின் இம் மொழியில் இலக்கியங்கள் ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னரே தோன்றலாயின.

10. பிற்காலத் தமிழகம்

தொல்காப்பியம் எனச் சிறந்த தமிழ் இலக்கண நூல் ஒன்று உண்டு. இஃது இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன் செய்யப்பட்டதாகும். அக்காலத்தில் தமிழ்நாட்டின் வடக்கு எல்லை திருப்பதி மலையாக இருந்தது. தமிழ்நாடு முழுமையும் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று மரபிலுள்ள அரசர்களால் ஆளப்பட்டது. அந்நாடு முழுமையும் பன்னிரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இந்நாடுகள் எல்லாவற்றிலும் செந்தமிழ் மொழி வழங்கிற்று.

1. செந்தமிழ் நாடு

செந்தமிழ் என்பது திருத்தமான மொழி. தமிழ் நாடு முழுமையிலும் செந்தமிழ் வழங்கிற்று. செந்தமிழ் வழக்குக்கு நடு இடமாகக் கருதப்பட்டது மதுரையும் அதன் சூழல்களும் அடங்கிய பகுதி.

2. இயற்சொல்

செந்தமிழில் இயற்சொல், திசைச்சொல், திரிசொல் என மூவகைச்சொற்கள் வழங்குகின்றன. இயற்சொற்கள் என்பன தோன்றிய காலம் முதல் உச்சரிப்பாலும், உணர்த்தும் பொருள்வகையாலும் மாறுபடாது தலைமுறை தலைமுறையாக மொழியிற் பயின்றுவரும் சொற்கள். இச் சொற்கள் பெரும்பாலும் ஓர் எழுத்து ஈரெழுத்துகளால் ஆனவை.

3. திசைச்சொல்

செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரண்டு நாடுகளில் வாழும் மக்கள் அவ்வந்நாடுகளில் மாத்திரம் பயன்படுத்தும் சில சொற்களையும் வழங்கினர். அச்சொற்கள் எல்லாத் தமிழ்நாடுகளிலும் பயன்படுத்தப்பட்டனவல்ல. திசைச் சொல் என்பதற்கு மத்திய செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த மற்றைய தமிழ் நாடுகளில் மாத்திரம் வழங்கும் சொற்கள் என்பது பொருள். இதற்கு எடுத்துக்காட்டு, ''தென் பாண்டிநாட்டார் ஆ, எருமை என்பவற்றைப் பெற்றம் என்றும், குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என்றும், நாயை ஞெள்ளையென்றும், குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும், கற்கா நாட்டார் ஏடா என்பதை எலுவன் என்றும், தோழியை இகுளை என்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும், பூழி நாட்டார் நாயை ஞமலி என்றும், சிறு குளத்தைப் பாழி என்றும், அருவா நாட்டார் செய்யைச் செறு என்றும், சிறு குளத்தைக் கேணியென்றும், அருவா வடதலை நாட்டார் குறுணியைக் குட்டை'' யென்றும் வழங்குதல்.

4. திரிசொல்

தொடக்கத்தில் வெவ்வேறு அடியாகப் பிறந்தனவும், சிறிது உச்சரிப்பு வேறுபட்டனவுமாகிய சொற்கள் வெவ்வேறு பொருளை உணர்த்தி நின்றன. காலப் போக்கில் அச்சொற்கள் சிறுகச் சிறுக மாறுபட்டு ஒரே உச்சரிப்பு உடையவாயின. ஆகவே, ஒரேசொல் பல பொருளைக்

குறிப்பதாயிருக்கின்றது. இவ்வகைச் சொற்கள் திரிசொற்கள் எனப்படும். பலசொற்கள் ஒரே பொருளையும் குறிக்கின்றன.

மலையைக்குறிக்க நாற்பது சொற்கள் வரையிற் காணப்படுகின்றன. அவற்றுட் சில விலங்கல், அடுக்கல், சிலம்பு, சிகரம், சையம், ஓங்கல், பிறங்கல், குன்று, விண்டு, வரை, கல், சாரல் என்பன. இச்சொற்கள் தொடக்கத்தில் வெவ்வேறு வகை மலைகளைக் குறிக்க வழங்கிய பெயர்களாகும். காலச்செலவில் அச் சொற்களின் ஆதிவழக்கு மறக்கப்பட்டன. இன்று அச்சொற்கள் எல்லாம் பொதுவில் மலையைக் குறிக்க வழங்குகின்றன. இவ்வகைச்சொற்களும் திரிசொல்லின்பாற்படும்.

11. வடசொல்

வடசொல் என்பதற்குத் தமிழ்நாட்டுக்கு வடக்கே வழங்கும் மொழிச்சொல் என்பது பொருள். இஃது, ஆரியச்சொல்லைக் குறிக்க இலக்கண நூல்களில் ஆளப்பட்டுள்ளது. தமிழ் பிறமொழிக் கலப்பின்றி நீண்ட காலம் இயங்கிற்று. ஐரோப்பியர் தொடர்பு ஏற்பட்ட காலத்திய வீரமா முனிவர், கால்டுவெல், ஒப்பேட் முதலிய கிறித்துவப் பாதிரிமார் தமது மதத்தைப் பரப்பும் பொருட்டுத் தமிழ்நாட்டை அடைந்தார்கள். அவர்கள் தமிழைக் கற்று அம் மொழியில் மதபோதனை செய்தும், நூல்கள் இயற்றியும் பொதுமக்களைத் தம் மதத்துக்கு இழுத்தனர். இவர்களை ஒப்ப முற்காலத்தில் வடநாட்டுப்

பார்ப்பனரும் புத்த மதத்தினரும், சைனமதத்தினரும் தமிழ்நாட்டை அடைந்து தமிழைக் கற்றார்கள். அவர்கள் தமிழில் மதபோதனை செய்ததோடு தமிழ்நூல்களும் இயற்றினர். அவர்கள் தமிழோடு தம் சமயமொழிச் சொற்களாகிய சமஸ்கிருதச்சொற்களையும் கலந்து வழங்கலானார்கள். அவர்களின் மதங்களைத் தழுவிய தமிழ்மக்களும் வடமொழியில் எழுதப்பட்ட அவர்கள் சமயநூலைக் கற்க விரும்பி வடமொழியைக் கற்றனர்; அவ் வடசொற்களைத் தமிழுடன் கலந்து வழங்குவாராயினர். இயற்கை அமைவுக்கேற்ப ஓர் ஓசை பெற்று வழங்கும் மொழியின் இடையிடையே அம்மொழி ஓசைக்கு அமைவில்லாப் பிறமொழிச் சொற்களைக் கலந்து வழங்குதல் செவிக்கு மிக இன்னாதாகும். ஆகவே, தமிழ் அறிஞர் இதனை விரும்பவில்லை; ஆயினும் அவர்களால் இவ் வழக்கை முற்றாகத் தடுக்கவும் முடியவில்லை. ஆகவே அவர்கள், ஒரோவிடத்துத் தமிழோடு வடசொல் கலக்க நேர்ந்தால் அது தமிழ் ஓசைக்கு ஏற்பத் தமிழ் எழுத்துகளில் அமைத்து எழுதப்படல் வேண்டுமென விதி வகுத்தனர். இவ்வகை விதியிருந்தபோதும் வடசொற்கள் விரவாமல் எழுதப்படும் நடையே சிறந்ததென அறிஞரால் போற்றப்பட்டது. இன்றும் அக்கருத்தே இருந்துவருகின்றது.

12. கொடுந்தமிழ்

கொடுமை என்பதற்கு வளைவு என்பது பொருள். வளைத்து அல்லது திரித்துப் பேசப்படும் தமிழ்

கொடுந்தமிழ் எனப்படும். மயிரை மசிரென்றும், மரத்தை மறம் என்றும், பழத்தைப் பலமென்றும் திரித்துவழங்குவன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். கொடுந்தமிழ் பெரும்பாலும் எழுதப் படிக்க அறியாத மக்களிடையே வழங்கும். அவ்வகைத் தமிழ் சேரிமொழி எனவும்படும். அது இன்ன இடத்தில் மாத்திரம் வழங்கும் என்பதற்கு வரையறையில்லை. இதனை நன்கு விளங்கிக்கொள்ளாத பிற்காலத்தார் பாண்டிநாட்டின் ஒரு பகுதியைச் செந்தமிழ்நாடு எனக்கொண்டு மற்றைய இடங்களில் வழங்கிய தமிழ் கொடுந்தமிழ் எனக் கருதினர். இது தவறுடையதென்பது எளிதில் விளங்குகின்றது.

இலக்கணம்

மொழியும் அதன் வழக்குகளும் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருவன. ஆகவே, ஒரு மொழிக்கு உரியோர் அம்மொழி வழக்குகளை நன்கு அறிந்திருப்பர். ஆகவே, அவர்கள் அம்மொழிக்கு இலக்கணம் எழுதிவைக்க வேண்டும் என்ற இன்றியமை யாமையை உணரமாட்டார்கள். இருமொழிக்கு உரிய மக்கள் ஒருவர் மொழியை ஒருவர் கற்கப்புகும்போதே இலக்கணத் தின் அவசியம் பெரிதும் உண்டாகின்றது. இதனைப் புத்த சைன கிறித்தவ அறிஞர் தமிழ் இலக்கணங்கள் பலசெய்தமை கொண்டு நன்கு அறியலாகும். இலக்கணம், நூலாக எழுதப்படாமல் இருத்தல் ஒரு மொழியின் குறையைக் காட்டுமெனச் சிலர் கருதுவது முற்றுந் தவறுடைத்து. தமிழுக்கு ஆதியில் இலக்கணஞ் செய்தவர்

புதிதாகத் தமிழ் பயின்ற அகத்தியர் என ஒரு கதை வழங்குகின்றது. இஃது இயற்கைக்கு மிக ஏற்றதாகக் காணப்படுகின்றது. வீரமா முனிவர் எந்நோக்கத்தோடு இலக்கணஞ் செய்தாரோ அந் நோக்கத்துடனேயே அகத்தியரும் இலக்கணஞ் செய்தார். அகத்தியர் செய்தது எனப்படும் இலக்கணம் இன்று காணப்படவில்லை.

13. தமிழ் என்னும் பெயர்

தமிழ் என்பது நாம் வழங்கும் மொழியின் பெயர். இப் பெயர் எவ்வாறு தோன்றிற்று என்பது நீண்ட காலமாக ஆராயப்பட்டு வருகின்றது. மொழிதோன்றிய காலத்தே அதன் பெயரும் உடன் தோன்றியிருக்க முடியாது. அது தோன்றி வளர்ச்சியடைந்த ஒரு காலத்திலேயே அதற்குப் பெயர் உண்டாயிருத்தல் கூடும்.

இன்று உலகில் பல மொழிகள் வழங்குகின்றன. ஒவ்வொரு மொழியும் அவ்வந்நாட்டின் பெயரைப் பெற்றுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாகச் சில மொழிகளின் பெயர்களைச் சொல்லிப் பாருங்கள். வங்காளம்-வங்காளி; மலையாளம்-மலையாளி; செர்மனி-செர்மனியம். இம் முறையிலேயே தமிழ்மொழிக்கும் பெயர் உண்டாயிருத்தல் வேண்டும்.

மேற்கூறியவைகளால் முதலில் நாட்டுக்கே பெயர் உண்டாகின்றதென விளங்குகின்றது. முற்காலங்களில் மக்கள் ஒவ்வோர் கோயிலைச் சூழ்ந்தே குடியிருந்தார்கள்.

''கோயிலில்லாத ஊரிற் குடியிருக்க வேண்டாம்'' என ஔவையார் கூறியிருப்பதை நோக்குங்கள். கோயிலைச் சுற்றியே பழைய பட்டினங்கள் எல்லாம் எழுந்தன. பட்டினப்பெயர்கள், பெரும்பாலும் அவ்வவ்விடங்களில் கோயில் கொண்டிருக்கும் கடவுளர் பெயர்கள் தொடர்பாக இருந்தன.

உலக மக்கள் எல்லாரும் ஞாயிற்றுக் கடவுளையே பெரிய தெய்வமாகக் கொண்டு வணங்கிய ஒரு காலம் உண்டு. அக்காலத்தில் மக்கள் ஞாயிற்றுக்கு ஒளியுடையவன் எனப் பொருள் தரும் வெவ்வேறு பெயர்களை இட்டு வணங்கினர். அவைகளுள் எல், சிவன், பகல், வேல், தாமன் என்பன முக்கியமுடையன. இப்பெயர் களில் யாதேனும் ஒன்று தொடர்பாக நமது நாட்டுக்கும் பெயர் உண்டாயிருத்தல் வேண்டும். அப்பெயர் தாமன் எனப்படுகின்றது. மேற்கு ஆசியாவிலே சென்று குடியேறிய பழைய தமிழ்மக்கள் சுமேரியர் எனப்படுகின்றனர். அவர்கள் ஞாயிற்றுக்கு இட்டு வழங்கிய பெயர் தாமுஸ்★ என்பது நமது நாட்டுக்கும் தாமன் என்பதன் தொடர்பான பெயர் உண்டாயிருத்தல் கூடும். எல் என்பது ஞாயிற்றைக் குறித்ததோடு பொதுவாகக் கடவுளைக் குறிக்கும் பெயராகவும் வழங்கிற்று. மேற்கு ஆசியநாடுகளில் இது பெருவழக்காக இருந்தது. தமிழ் என்னும் பெயர் தாமன்-எல் என்னும் இரு சொற்களின் சேர்க்கையால் உண்டாகிப் பின் மருவித் தமிழ் ஆயிற்று எனக் கொள்ளலாம். தாமம் அல்லது

* தாமுஸ் கடவுள் மேற்கு ஆசியா முழுமையிலும் பெரிய கடவுளாக விளங்கினார்.

தாமுஸ் என்பதிலிருந்து தமிழ் என்னும் பெயர் தோன்றியதெனச் சிலர் கூறியிருப்பதற்கு இங்கு யாம் கூறியுள்ளவை விளக்கம் அளிப்பனவாகும்.

14. தமிழ்மொழிபற்றிய பழங்கதைகள்

தமிழ் பழைமை உடையதாதலின் அதனைப் பற்றிய உண்மை வரலாறுகளோடு கற்பனைக்கதைகள் பல வந்து கலந்தன. 'சிவபெருமான் தமிழை அருளிச் செய்தார். ஞாயிற்றுக் கடவுளிடமிருந்து தமிழ் பிறந்தது. அகத்தியருக்குச் சிவ்பெருமானும், முருகக் கடவுளும் தமிழ் இலக்கணத்தை உபதேசித்தார்கள்' என்பன அப் பழங்கதைகளுட்சில. மொழி, மக்கள் பலரால் பேசப்பட்டுக் காலந்தோறும், படிப்படியே வளர்ச்சியடைந்து வருவது. ஆகவே, அதனைக் கடவுளரோ முனிவரோ உண்டாக்கினார் எனக் கூறுதல் இயற்கை விதிக்குமாறுபட்டது. தமிழ், கடவுளிடத்துப் பிறந்ததெனக் கொள்ளுவதற்கு ஒரு காரணமுண்டு. ஞாயிறு, சிவன், தமிழ் என்னும் சொற்கள் ஒரு காலத்தில் ஒரே கடவுளைக் குறிக்க வழங்கின. அதுபற்றித் தமிழ், கடவுளிடத்தினின்றும் பிறந்ததென்னும் பழங்கதை தோன்றுவதாயிற்று.

தமிழ், சிவன் என்னும் சொல் ஒரே பொருளன.[1] பழைய நூல்களில் தமிழ் என்னும் சொல் இனிமை அழகு என்னும் பொருள்களில் ஆளப்பட்டிருக்கின்றது. பழைய காலத்தில் தமிழ்மக்கள் மாத்திரமல்லர்; எல்லா மக்களும் அரிய

நிகழ்ச்சிகள் கடவுளால் நிகழ்த்தப்படுவன என்று நம்பி வந்தனர். ஆகவே, மக்கள் மொழியையும் கடவுள் வெளியிட்டதாகவே கருதினார்கள். மேற்கு ஆசியாவிலே வாழ்ந்த அசிரிய மக்கள் நோபா என்னும் கடவுள் ஆப்பெழுத்தை அருளிச்செய்தார் என நம்பிவந்தார்கள். பழைய எகிப்தியரின் எழுத்துகளுக்கு இடப்பட்ட 'கிரோகிளிபிக்ஸ்' என்னும் பெயருக்குத் தேவர் எழுத்தை எழுதுவது என்பது பொருள். சமஸ்கிருதம் எழுதப்படும் எழுத்துக்கு இடப்பட்டுள்ள தேவ நாகரி என்னும் பெயருக்குத் தேவர் நகரில் வழங்குவது என்பது பொருள். இவைகளை நோக்குமிடத்துச் சிவபிரான், முருகக் கடவுள் ஆகிய கடவுளர் தமிழ்மொழிக்கு இலக்கணம் அருளிச் செய்தார்கள் எனக் கூறப்படும் கதை நமக்கு வியப்பை யளிக்காது. பழைய காலமக்கள் வரலாறு எழுதும் முறைகளில் இதுவும் ஒன்று என நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

15. முத்தமிழ்

தமிழ் மிகப் பழைமைதொட்டே இயல், இசை, நாடகம் என மூவகையாக வழங்குகின்றது. இம்மூன்றும் தமிழ்

1 தமிழ்சிவ மினிமை யெனுந்தனிப்பொருளாம்
அமிழ்தெனும் அநாதி யியற்கையாய்ப் பன்னிரு
கலையினை யுடைய கதிரவனென்னத்
தலைமையா யமைந்த தனியியற் பிதாமொழி.
- பேரிசைச் சூத்திரம்

வளர்ச்சியடைந்த போது அஃது அடைந்திருந்த வெவ்வேறு நிலைகளின் வளர்ச்சிகளே. இவையே முத்தமிழ் ஆகும். இயல், இசை, நாடகம் என்பவைகளில் முதலில் தோன்றியது நாடகமும், பின்பு இசையும் அதன் பின்பு இயலுமாகும்.

நாடகத் தமிழ்

மக்கள் பேச முயன்ற முற்பருவத்து உடல்நிலை முகக்குறி பார்வைகள் போன்ற சைகைகள் தோன்றி நடைபெற்றன. மகிழ்ச்சி, வீரம் போன்ற மனஉணர்ச்சிகள் தோன்றும் போதும் மக்கள் வெவ்வேறு வகையாகத் துள்ளிக் குதிக்கிறார்கள். இவ்வகையான துள்ளல்களையும், ஆடல்களையும், இன்றும் பிற்போக்குடைய மக்களிடையே காணலாம். முன்கூறிய உடல் நிலை சைகைகளும் பின்கூறிய மன உணர்ச்சிக்கேற்ப நிகழும் ஆடல்களும் இணைக்கப்பட்டு நடிப்பும் கலையாக வளர்ச்சியடைந்தது. ஆடல் உணர்ச்சியை வெளிப்படுத்துவதாக இருந்தது. உலகில் எல்லா மக்களும் ஆடலைச் சமய சம்பந்தமாகப் பயன்படுத்தி வந்தனர். நடனம் கடவுள் வழிபாட்டுக்கு இன்றியமையாதது எனக் கருதப்பட்டது. கடவுள் வணக்கத்தின் பொருட்டு ஆலயங்களுக்குச் செல்வோரும் கடவுள் முன்னிலையில் ஆடினார்கள். ஆடலை மிகப் புனித முடையதாகக் கொண்டமையினாலேயே தமிழர் தம் கடவுளை நடனம் செய்பவராகவும், நடன சபைக்குத் தலைவராகவும் கொண்டார்கள்.

ஒரு கருத்தைச் சைகைகளோடு மெய்ப்பாடும்★ தோன்ற ஒருவன் அல்லது ஒருத்தி நடித்துக் காட்டுவதே முற்கால நடனம். பின்பு பலர் சேர்ந்து ஒரு கதையை நடித்துக் காட்டுதலாகிய நாடகம் தோன்றி வழங்குவதாயிற்று. பின்பு நாடகம் நடிப்பதற்கு உரிய விதிகள் தோன்றலாயின. இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளின் முன் சிலப்பதிகாரம் என்னும் நூல் இளங்கோவடிகள் என்னும் அரசப்புலவர் ஒருவரால் பாடப்பட்டது. அதில் அரங்கேற்று காதை என ஒரு பகுதி உண்டு. அக் காதையில் நாடக அரங்கு, நடிக்கும் முறை முதலிய பல விளக்கங்கள் காணப்படுகின்றன. தமிழ்மக்களிடையே வளர்ச்சியடைந்த நாட்டியக்கலை நாடகத்தமிழ் என வழங்குவதாயிற்று. நடிப்புக்கேற்ற பாடல்களும், தாளத்துக்கேற்ப ஒலிக்கும் மத்தளம் சல்லரி முதலிய இயங்களும் நடிப்புடன் பயன்படுத்தப்பட்டன.

இசைத்தமிழ்

உள்ளத்தெழும் உணர்ச்சிகளுக்கேற்ப மக்கள்வெவ்வேறு ஒலிகளைப் பிறப்பிக்கின்றனர். வீரம் எய்திய ஒருவனது பாடலும், சோகம் அடைந்த இன்னொருவனின் இரங்கலும், மகிழ்ச்சிமேலீட்டினால் ஆரவாரிக்கும் மற்றொருவனின் ஆரவாரமும் வெவ்வேறு குரல்களில் அமைந்திருத்தலை நாம் காணலாம். மேடைமீது நின்று பேசும் பேச்சாளன் தனது பேச்சின் பொருள்களுக்கேற்ப ஓசைகளை மாற்றிப்

* மெய்ப்பாடு என்து மனத்தில் எழும் உணர்ச்சி உடம்பில் தோன்றுதல்.

பேசுதலை நாம் கருத்திற் கொள்ளலாம். இவ்வகை அடிப்படையினின்றே இசை தோன்றிப் படிப்படியே வளர்ச்சியடைவதாயிற்று. எவ்வெப் பொருளில் மக்கள் பாட விரும்பினார்களோ அவ்வப் பொருள்களுக்கு ஏற்ற ஓசைதரக்கூடிய முறையில் ஏற்ற சொற்களை அடுக்கிவைத்து இசைப் பாடல்கள் செய்யப்பட்டன. பாடல்கள் வெவ்வேறு வகையாகக் காணப் படுவதற்குக் காரணம் இதுவேயாகும். சில பாடல்கள் பாடி ஆடுதற்கேற்றன; சில பாடுதற்கு மாத்திரம் ஏற்றன. இனி ஓசைகளைத் தரும் நரம்புக்கருவிகளும் தோன்றி வளர்ச்சியடைந்தன. பாடல் களின் இரசம் அல்லது சுவை என்று சொல்லத்தக்க உணர்ச்சி தரும் ஒலிகள், நரம்புக் கருவிகளிலும் பிறப்பிக்கப்பட்டன. நரம்புக்கருவிகள் நாளடைவில் வாய்ப்பாட்டுக்கு இன்றி யமையாதனவாகக் கொள்ளப்பட்டன. பலவகைச்சுவைகள் தோன்றப்பாடுதற்கேற்ற தமிழ்ப் பாடல்களும், இசை பாடும் விதிகளைக் கூறும் நூற்றொகுதிகளும் இசைத் தமிழ் எனப்பட்டன. மிகப் பழைய இசைப்பாடல்களில் வரிப்பாட்டு, பரிபாடல் என்னும் சில பாடல்களே நமக்குக் கிடைத்துள்ளன. பண்ணோடு பாடப்படும் தேவாரம், திருவாய்மொழி, பிறகாலக் கீர்த்தனங்கள் முதலியன இன்று காணப்படும் இசைப் பாடல்களுட் சில.

இசைக்கலையிற் கேட்டு மகிழ்தற்குரியன மூன்று பொருள்கள். அவை இனிய ஓசை, பாடலின் பொருள் சொல்லழகு என்பன. இவ்வுண்மை சிலகாலம் தமிழ் நாட்டிற்கவனிக்கப்படவில்லை. பிறமொழிப்பாடல்களே தமிழர் கேட்டு மகிழ்தற்கேற்றன என்று ஒரு வகுப்பினர்

கருதித் தெலுங்கு, இந்திப் பாடல்களைத் தமிழருக்குப் பாடுவாராயினர். ஆனால், மக்கள் இதனை ஒப்பவில்லை. தமிழ்நாட்டில் தமிழ்ப்பாடல்களே பாடப்படல் வேண்டும் என்னும் உணர்ச்சி விரைந்து பரவிற்று. இன்று தமிழ்இசை உணர்ச்சி நாடெங்கும் வீறு கொண்டிருக்கின்றது.

வரலாறு அறியாத சிலர் வடமொழியாளரே இசையைத் தமிழருக்கு அளித்தார்கள் எனக் கூறி வட மொழியில் கந்தர்வவேதம் என ஒன்று உண்டெனக் கூறுவர். இசை என்பது எல்லா மக்களுக்கும் பொதுவானது. அது கால இடங்களுக்கேற்ப வெவ்வேறு முறையில் வளர்ச்சியடைவதாயிற்று. இமயமலை அடிவாரங்களில் வாழும் ஒருவகை மலைச்சாதியினர் கந்தருவர் எனப்பட்டார்கள். அவர்கள் இசைபாடுவதில் திறமையுடையவர். அவர்கள் இசை பாடும் திறத்தைக்கண்ட ஆரிய மக்கள் தமது இசைக் கலைக்குக் கந்தர்வவேதம் எனப்பெயரிட்டனர். இதனால் ஆரியமக்கள் தமிழருக்கு இசைக்கலையை உதவியவர்களாக மாட்டார். தென்னாட்டு இசைக்கலையே வடநாட்டு இசைக்கலைக்கு அடிப்படை என இசைவாணர் ஆராய்ந்து கூறுகின்றனர்.

இயற்றமிழ்

இசையைக் குறிக்கோளாகவன்றித் தம் கருத்துகளை ஓவியம்போல் கேட்டோர் உள்ளத்தே தோற்றுவிக்கக்கூடிய தனிப்பாடல்களையும், நூல்களையும் புலவர்கள் செய்தார்கள். அவைகளின் தொகுதி இலக்கியம் என்னும் பெயர் பெறும். பின்பு மொழிமரபு, செய்யுள் மரபுகளைக்கூறும்

நூல்கள் எழுந்தன. அவை இலக்கணம் எனப்பட்டன. இலக்கிய இலக்கணங்களின் தொகுதி இயற்றமிழ் என்னும் தலைப்பில் அடங்கும். இயற்றமிழ் ஓரளவு இசைத்தமிழைத் தழுவியதாகும். இயற்றமிழப் பாடல்கள், கூறும் பொருளுக் கேற்ற பாடல்களிற் புனையப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடல்வகையும் வெவ்வேறு ஓசையிற் படிக்கப் படுகின்றன. இவ்வியல்புகள் அவை ஓரளவு இசைத்தமிழின் போக்கைத் தழுவியுள்ளன என்று நாம் கருத இடந் தருகின்றன.

இருவகை வழக்கு

தமிழ்நடை பேசும்நடை, எழுதும் நடை என இருவகைப் படும். ஒருவரோடு ஒருவர் உரையாடும்நடை வழக்கு எனப்படும். முற்காலத்து எழுத்து நடை செய்யுள் நடையாக இருந்தது; வசனநடை பிற்காலத்திற்றோன்றியது. பேச்சு நடையே ஓசை இன்பம் தோன்றுமாறு எதுகை மோனை அமைத்து அளவுபடுத்தப்பட்டுச் செய்யுள் என்னும் பெயர் பெற்றது. செய்யுள் என்பதற்கு அளந்து செய்யப்பட்ட தென்பது பொருள். தாள், அச்சு, இயந்திரம் முதலியவை களின் பயன்கள் அறியப்படாதிருந்த காலத்தில் செய்யுள் நடையே எழுத்து நடைக்கு ஏற்றதாகவும் இருந்தது. வசன நடையில் பல வரிகளில் எழுதிக்காட்டும் ஒருபொருளைச் செய்யுள் நடையில் சில வரிகளில் அடக்கிக் காட்டி விடுதல் கூடும். ஐரோப்பிய கிறித்துவ பாதிரிமார் தமிழ்நாட்டுக்கு வந்த பின்னரே வசனநடை வளர்ச்சி அடைவதாயிற்று. வசன நடை தலைஎடுத்ததும் செய்யுள் நடை அருகி நடை பெறுகிறது.

16. தமிழ்ச்சங்கம்

இவ்வுலகிலே மக்கள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் மிக்க நாகரிகம் அடைந்திருந்தார்கள். அவர்கள் பெரிய நகரங்களில் கல்விக்கழகங்களையும், கல்விச்சாலை களையும் வைத்து நடத்தினார்கள். மேற்கு ஆசியாவிலே ★பாபிலோன், போர்சிப்பார், அக்காட், ஊர், எரெக், நிப்பூர் முதலிய நகரங்களில் பெரிய கல்விச்சாலைகளும் புத்தக நிலையங்களும் இருந்தன. எகிப்திலே அலக்சாந்திரியாவில் இற்றைக்கு இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளின் முன் பெரிய புத்தக நிலையமிருந்தது.

இந்திய நாட்டிலே தெற்கில் மதுரையும் வடக்கில் தக்கசீலமும் பெரிய கல்விக்கழகங்களாக இருந்தன. தக்கசீலம் என்னும் பட்டினம் இரணியன் என்னும் அசுர வேந்தனால் கட்டுவிக்கப்பட்டதென்பது ஐதீகம். அசுர வகுப்பினர் திராவிட (தமிழ்) வகுப்பினராவர். வடக்கே வழங்கிய மொழி மாறுபட்டபோது தக்கசீலம் வடமொழிக் கல்விக்கு மத்திய இடமாக இருந்தது.

வடக்கே இருந்த தக்கசீலத்தைப்போலத் தெற்கே மதுரை பெரிய கல்விக்கழகமாக இருந்தது. இது தமிழ்க்கல்விக்கு மத்திய இடமாக விளங்கிற்று. மதுரை பாண்டிய அரசரின் தலைநகர். இக்கல்விக் கழகம் மதுரையிலே நீண்ட காலம் நடைபெற்றது. இம் மதுரை நகர் ஏறக்குறைய இரண்டா யிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்

* Babylon, Barsipa, Akad, Ur, Erek, Nipur.

பட்டது. மதுரை தோற்றுவிக்கப்படுவதன் முன் பாண்டியரின் தலைநகர் மணலூரில் இருந்தது. அது திருச்செந்தூருக்குப் பக்கத்தில் உள்ளது. அதற்கு முன் அவர்களின் தலைநகர் கபாடபுரமாக இருந்தது. அது பொருநை ஆற்று முகத்துவாரத்தில் இருந்ததெனப்படுகின்றது. கபாடபுரம் தலைநகராவதற்கு முன் தென்மதுரை அவர்களின் தலைநகராக இருந்தது. இது கன்னியாகுமரிக்குத் தெற்கேயிருந்த நாட்டிலிருந்து கடலாற் கொள்ளப்பட்டது. தென் மதுரையிலேயே முதன்முதல் தமிழ்ச்சங்கம் கூட்டப்பட்டது எனப்படுகின்றது. காலத்துக்குக் காலம் பாண்டியர் தலைநகர் மாறியபோது தமிழ்ச்சங்கம் அவ்வந் நகரங்களில் நிகழ்வதாயிற்று. ஒரு நகரின் அழிவுக்குப் பின்னும் இன்னொரு நகரம் தலைநகராவதற்கு முன்னும் இத் தமிழ்ச்சங்கம் இடையிடையே நிகழாதொழிந்தது. இவ்வாறு இடையிடையே நிகழாது போனமையின், இச்சங்கம் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனப் பெயர்கள் பெற்றன.

17. சங்கவரலாறு

1. தலைச்சங்கம்

தமிழ்ச்சங்கம் பாண்டிய அரசன் ஒருவனால் துவக்கப் பட்டது. அவன் தமிழ்நாட்டிலே ஆங்காங்குத் தமிழ்ப் புலமை பெற்றிருந்த அறிஞரைத் தனது தலைநகருக்கு வரவழைத்து அவர்களைச் சங்க உறுப்பினர்களாக்கினான்.

இச் சங்கத்தின் உறுப்பினர்கள் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மராவர். இச்சங்கம் நிலைபெற்ற காலத்தில் பாடல்களையோ நூல்களையோ செய்து அரங்கேற்றினார். நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மராவர். இச் சங்கம் காய்சினவழுதி என்னும் பாண்டியன் காலம் முதல் கடுங்கோன் காலம் வரையில் நடைபெற்றது. இவ்விரு அரசர் உட்படச்சங்கம் நடத்தியவர்கள் எண்பத்தொன்பது பேராவர். முற்கால அரசரின் சராசரி ஆட்சிக்காலம் முப்பது ஆண்டு எனப் பழைய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இக்கால ஆசிரியர்கள் இருபது ஆண்டுகள் வரையில் எனக் கூறுவர். இக்காலக்கணக்கின்படி கணக்குச் செய்யின் எண்பத்தொன்பது அரசரின் காலமும் 1780 ஆண்டுகளாகும். தமிழ்ச்சங்கம் கூடிய தென்மதுரையைக் கடல் கொண்டது. அப்பொழுது இக் கழகம் குலைந்து போயிற்று. எண்பத்தொன்பது அரசர் காலத்திலும் நடைபெற்ற தமிழ்க்கழகத்தைப் பிற்காலத்தார் தலைச்சங்கம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

2. இடைச்சங்கம்

தென் மதுரையின் அழிவுக்குப்பின் பாண்டியர் கபாடபுரத்தைத் தமது தலைநகராகக் கொண்டனர். அவ்விடத்தில் மறுபடியும் தமிழ்க் கழகம் கூட்டப்பட்டது. இக்கழக உறுப்பினர் ஐம்பத்தொன்பது புலவர்களாவர். இவ்வுறுப்பினரில் ஒருவர் மறைந்துவிடின் அவர் இடத்துக்கு இன்னொருவர் தெரிந்தெடுக்கப்படுவர். இக்கழகத்தில் பாடல்களையோ நூல்களையோ செய்து அரங்கேற்றிய

புலவரின் எண் மூவாயிரத்தெழுநூறு. இக்கழகம் வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாகவுள்ள ஐம்பத்தொன்பது பாண்டியர் ஆட்சிக்காலத்தில் நடை பெற்றது. இவர்களின் ஆட்சிக்காலம் 1180 ஆண்டுகள் வரையிலாகும். முடத்திருமாறன் காலத்தில் கபாடபுரத்தைக் கடல் கொண்டது. அப்பொழுது பாண்டியர் தமது தலைநகரை மணலூருக்கு மாற்றினார்கள். பின்பு அவர்கள் வையை ஆற்றுக்கு அருகே உள்ள கடம்பவனத்தில் மதுரைநகரை அமைத்து அதனைத் தமது தலைநகராக்கினர்.

3. கடைச்சங்கம்

மதுரையிலே மறுபடியும் தமிழ்ச்சங்கம் கூட்டப்பட்டது. இக் கழகத்தின் உறுப்பினர் நானூற்று நாற்பத்தொன்பதின் மராவர். இச் சங்க காலத்து நூல்களையும் பாடல்களையும் செய்து அரங்கேற்றிய புலவர்களின் எண் நாற்பத்தொன்பது. இக்கழகம் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி ஈறாகவுள்ள நாற்பத்தொன்பது பாண்டியர் காலத்தில் நடைபெற்றது. நாற்பத்தொன்பது பாண்டியர் ஆட்சியின் காலமும் 980 ஆண்டுகள் எனக் கொள்ளலாம். இம் மூன்று சங்கங்களும் ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகள் நடைபெற்றன என்று உத்தேசமாகக் கூறலாம்.

மெகஸ்தனீஸ் என்னும் கிரேக்கர் ஒருவர் சந்திரகுப்தன் என்னும் வடநாட்டு அரசனின் அரண்மனையில் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன் தங்கியிருந்தார். அவர் இந்திய நாட்டைப்பற்றிய வரலாறு ஒன்று எழுதியிருந்தார். அவர் அலக்சாந்தரின் படை எடுப்புக்கு

முன் பாண்டிநாட்டை ஆண்ட அரசரின் எண் 154 என அதில் கூறியிருக்கின்றார். 154 அரசரின் காலமும் 3080 ஆண்டுகள் வரை ஆகின்றது. கடைச் சங்கம் இற்றைக்கு ஆயிரத்து எழுநூறு ஆண்டு வரையில் இருந்து பின் குலைந்து போயிற்று எனக் கருதப்படுகிறது. அலக்சாந்தருக்கும் சங்கம் ஒடுங்கியதற்கும் இடையிலுள்ள காலம் 600 ஆண்டுகள் வரையிலாம். அறுநூறு ஆண்டுகளும் இருபது அரசரின் ஆட்சிக் காலத்துக்கு நேர். மெகஸ்தனீஸ் கூறும் அரசர் கணக்கின்படி சங்ககால இறுதிவரையிலுள்ள பாண்டிய அரசர்களின் முழு ஆட்சிக் காலமும் 3700 ஆண்டுகள் வரையில் ஆகின்றது. இது முன் கூறிய கணக்கோடு மிகவும் ஒத்திருக்கின்றது. தமிழ் மக்கள் 6000 ஆண்டுகளின் முன் சிறந்த நாகரிகம் பெற்றிருந்தார்களென்பது சிந்துவெளியிற் கிடைத்த பழம் பொருள்களால் நன்கு விளங்குகின்றது. ஆகவே, மிகப் பழங்காலந்தொட்டுத் தமிழ்ச்சங்கம் நிகழ்ந்ததென்பது மிக ஏற்றுக்கொள்ளத்தக்க வரலாறே யாகும்.

18. சங்கநூல்கள்

சங்க காலத்துப் புலவர்கள் பலர் பாடல்களும் நூல்களும் செய்தார்கள் என்று படித்தோம். மிகப் பழைய நூல்கள் பெயர் அளவில் மாத்திரம் உள்ளன. கடைச்சங்க காலத்திற் செய்யப்பட்ட சில பாடல்களே இன்று கிடைத்துள்ளன. அப் பாடல்கள் பொருள் பற்றியும் அளவுபற்றியும் வெவ்வேறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அப் பாடல்களின்

கோப்புகள் இன்று 'சங்க நூல்கள்' என வழங்குகின்றன. அப் பாடல்களைச் செய்த புலவர்கள் தமிழ்நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தவர்களாவர். அப் பாடல்கள் தமிழ்ச் சங்கத்தே படி எடுத்து வைத்துக் காப்பாற்றப்பட்டன. சங்கம் குலைந்த பின்பு வந்த பாண்டிய அரசர் தக்க புலவர்களைக்கொண்டு அவைகளை ஆராய்ந்து தொகுத்து முறைப்படுத்தினார்கள். சங்க நூல்கள் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு என்பன. எட்டுத்தொகை என்பதில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன அடங்கும். திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன பத்துப்பாட்டில் அடங்கும். நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், இன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி முதலிய பதினெட்டும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கும். இவையும் சங்கநூல்கள் எனப்படுகின்றன. இந்நூல்களிற் பெரும் பாலான சங்ககாலத்திற்கு மிகப்பிற்பட்டன. தொல்காப்பியம் என்னும் இலக்கணநூல் இடைச்சங்க காலத்திற் செய்யப்பட்டதெனப்படுகின்றது.

இன்று பெயரளவிற் காணப்படுகின்ற நூல்களிற் பல இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகள் வரையில் இருந்தன. அக்காலத்தில் விளங்கிய உரையாசிரியர்கள் அந்நூல் களிலிருந்து மேற்கோள்கள் எடுத்து ஆண்டிருக்கின்ற மையின் இது விளங்குகின்றது. அச்சுப்பொறி, தாள் முதலிய வாய்ப்புகள் உண்டாயிருக்கின்ற இக்காலத்தில் ஆயிரக் கணக்கில் அச்சிட்ட நூல்களிற் பல கிடைக்கின்றில. சில படிகள் மட்டிலுள்ள பழைய கால ஏட்டு நூல்கள் இறந்து போனமை வியப்பன்று.

சங்கநூல்களில் கூறப்படும் பொருள்கள்

அகம்: சங்கநூல்களில் அகம், புறம் என்னும் இரண்டு பொருள்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றன. அகம் என்பது, நற்குணம் வாய்ந்த கணவனும் மனைவியும் அன்புடையவர் களாய் மனையில் இருந்து, இல்லறம் நடத்தும் பண்புகளைக்கூறும் பகுதி. கணவன் மனைவியர் எவ்வாறு அன்புடையவர்களாயிருந்து, பல்வகை அறங்களைச் செய்தார்கள் என்பதைப் புலவர்கள் பலவாறு வருணித்துக் கூறியிருக்கின்றனர்.

புறம்: புறம் என்பது போர், அரசியல் போன்ற பொருள்கள், புலவர்கள் பெரும்பாலும் அரசருடைய புகழைப்பற்றிப் பாடினார்கள். அப் பாடல்களும் புறம் எனப்பட்டன. ஓர் அரசன் இன்னொரு அரசனோடு போர் தொடுத்தல், அவனை வெற்றி கொண்டு பணிய வைத்தல் போன்ற பொருள்களைக் குறித்துப் பாடப்பட்ட

பாடல்களும் புறம் என்பதில் அடங்கும். புறப் பொருட் பாடல்களால் அக்கால அரசரின் போர்முறை, ஆட்சிமுறை, நியாயம், கொடை, வீரம் போன்ற அரிய பொருள் களைப்பற்றி நன்கு அறிதல் கூடும்.

19. நீதிநூல்கள்

ஒவ்வொரு மக்கட் கூட்டத்தினரிடையும் ஒருவரோடு ஒருவர் சமாதானமாக நடந்துகொள்வதற்கேற்ற நீதிகளும் சட்டங்களும் தோன்றியிருந்தல் இயல்பு. மக்களின் பழக்க வழக்கங்களே காலத்தின் நீதியாகவும் சட்டங்களாகவும் மாறுபடுகின்றன. சட்டங்களும் நீதிகளும் மக்களின் நாகரிக உயர்வு தாழ்வுகளுக்கு ஏற்றவாறு மாறுபடும். ஒருவகை மக்களிடையே எல்லா மக்களாலும் சிறந்தன என்று கொள்ளப்படும் ஒழுக்கவிதிகள் காணப்படின், அம்மக்க ளின் நாகரிகம் மிக உயர்வுடையதெனத் துணியலாகும். தமிழ் மக்களிடையே மிகமிக முற்காலந்தொட்டு உயர்ந்த ஒழுக்க முறைகள் கையாளப்பட்டு வந்தன. அவ்வொழுக்க விதிகள் நூல்களாக எழுதப்பட்டிருக்கவில்லை. அவ் விதிகளைத் தமிழ்ச் சமூகம் முழுமையும் நன்கு அறிந்திருந்தது. நீதித்தீர்ப்புக்குரிய சட்டங்களும் எழுதப்படாது இவ்வாறே இருந்து வந்தன.

தமிழரின் ஒழுக்க முறைகள் நீதிநூல்களாக எழுதி வைக்கப்படுவதற்குரிய சில ஏதுக்கள் நிகழ்ந்தன. மேற்குத் தேசங்களினின்றும் மக்கள் கிழக்குத்தேசங்களுக்கு வந்தார்கள்.

அப்பொழுது அவர்களுக்குக் கிழக்குத்தேசமக்களின் பழக்க வழக்கங்களும் பிறவும் மிக வியப்பளித்தன. ஆகவே அவர்கள் அவைகளைப் பற்றிச் சிறிதும் அறியாதிருக்கும் தம்மினத்தவர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டுத் தாம் கண்டவற்றை நூலாக எழுதி வைப்பாராயினர். மார்க்கோ போலோ என்னும் இத்தாலியன் கிழக்குத்தேச மக்களைப்பற்றி எழுதிய நூல் மேற்குத்தேச மக்களுக்கு மிக வியப்பளித்தது.

இதனை ஒப்பவே தமிழரல்லாத பிற மக்கள் தமிழ் நாட்டை அடைந்தபோது, அவர்கள் தமிழர்களின் ஒழுக்க முறைகளைத் திரட்டி நூல்கள் செய்தார்கள். தமிழ்பயின்ற அயல்நாட்டவர்கள் அறிந்துகொள்ளுமாறும் தமிழ் அறிஞர் தமிழில் நீதிநூல்கள் செய்வாராயினர். பின்பு நீதிநூல்கள் செய்வது நூல் செய்யும் வழக்குகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. தமிழர் ஒழுக்கம் இல்லாதவர்கள். ஆதலினாலேயே தமிழில் பல நீதிநூல்கள் செய்யப்பட்டன என்று சில அறிவிலிகள் கருதுவாராயினர். அது முற்றும் தவறுடையது. நீதி நூல்களுள் சிறந்தது திருக்குறள். திருக்குறளில் உள்ள கருத்துகள் தமிழ்மக்களிடையே பழங்காலம் தொட்டு நிலவியவைகளாகும். இக்கருத்து களைத் தழுவிச் சாணக்கியர் என்னும் தமிழர் வடமொழியிற் செய்த அர்த்தநூல் வடநாட்டில் பெரிதும் மதிப்புப் பெறலாயிற்று. சாணக்கியர் நூலுக்கும் திருக்குறளுக்கும் கருத்தொற்றுமை பெரிதும் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் இருவரும் நூல் செய்தற்குரிய கருத்துகள் தமிழ்மக்களுக்கு உரியனவாயிருந்தமையாகும். நீதிநூல்கள்

வடமொழியின்றும் மொழி பெயர்க்கப்பட்டன என்று சிலர் சொல்வதற்குக் காரணம், முன்பு தமிழருக்குரிய நீதிகளை ஆரிய மக்கள் அறியும்பொருட்டு அவை வடமொழியில் எழுதப்பட்டமையினாலாகும்.

20. புத்த சைன காலம்

அசோக அரசன் புத்தசமயத்தை உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரப்புவதில் மிக அக்கறை கொண்டிருந்தான். அவன் மேற்கு ஆசியா, ஐரோப்பா, சீனா, இலங்கை, பர்மா முதலிய நாடுகளுக்குப் புத்தகுருமாரை அனுப்பி புத்த சமயத்தை அவ்வந்நாட்டு மக்கள் தழுவும்படி செய்தான். அசோகன் காலம் முதல் புத்த சமயமும் அதனைத் தொடர்ந்து சைனமதமும் தமிழ்நாட்டை அடைந்தன. மணிமேகலை என்னும் சிறந்த இலக்கியம் செய்த சீத்தலைச்சாத்தனார் புத்த மதத்தினர் எனப்படுகின்றனர். அவர் காலத்தில் சைன மதத்தினரும் தமிழ்நாட்டில் காணப்பட்டனர். அக் காலத்தில் சமய வாதங்கள் நிகழ்வது சாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. இவ்வகை மதப்போராட்டங்கள் போன்ற குழப்பங்களா லேயே தமிழ்ச்சங்கம் நின்றுபோயிற்று எனக் கருதத்தக்க தாகின்றது. கிறித்துவ ஆண்டு தொடங்கி முந்நூறு ஆண்டுகளுக்குப்பின் வடக்கினின்றும் வந்த தமிழ் அறியாத பல்லவர் என்னும் ஒரு சாதியினர் சோழ இராச்சியத்தைக் கைப்பற்றினார்கள். அவர்கள் ஆட்சி நீண்டகாலம் தமிழ்நாட்டில் நிலைத்தது. இக்காலங்களிற் செய்யப்பட்ட தமிழ் நூல்களில் பிறமொழிச் சொற்களும் வடநாட்டுப்

புனைவு நூற்கதை (புராணக் கதை)களும் பெரிதும் புகலாயின. பல்லவ அரசர் காலத்திலேயே வடமொழிக்குத் தமிழ்நாட்டில் ஏற்றம் உண்டாயிற்று. அக்காலக் கல்வெட்டுகளில் தமிழ் வடமொழி என்னும் இருமொழிக்கலப்புகளும் காணப்படுகின்றன. பல்லவ அரசர் காலத்திலே ஆலயக்கிரியைகளில் ஆரியம் ஓதும் வழக்கு உண்டாயிருத்தல் கூடும். தமிழ் மரபுகளுக்கு மாறாக நடந்து கொண்ட பல்லவ அரசரைத் தமிழ்மக்கள் விரும்பவில்லை; அவர்களைக் கீழ்மக்களாகவே கருதி வந்தார்கள். ''பல்லவர் கயவர் பதகர் நீசர்'' எனப் பிங்கல நிகண்டு கூறுகின்றது. புத்தசைன காலங்களில் எழுதப்பட்ட நூல்நடைகளையும் சங்ககால நூல்நடைகளையும் எளிதில் பிரித்தறிதல் கூடும். ★

மோனையாந் தெய்வத் தமிழ்மொழி நிறீஇய
சங்கத் தலைவர்கள் தலைமை பூண்டங்
கறம்வள ரவையில் அரங்கே றியநாள்
வழுதியவர் வளர்த்தது சங்ககாலம்.

(பேரிசைச் சூத்திரம்)

---

* கொல்லா விரதம் பூண்ட நலத்தோர்
அறிவா னிறைந்த வறமாண் புடையோர்
தமிழின தருமை தனியா யுணர்ந்தோர்
கருவிநூற் காவியங் கழறும் பெரியோர்.
கால கதியாற் கடைநிலைப் படுவோர்
தம்வயப் படுவது சமண காலம்

சைவ வைணவ எழுச்சி

புதிதாகச் சமயங்களைப் பரப்புவோர் முதலில் அரசரைத் தம் மதத்துக்குத் திருப்புவது வழக்கம். தமிழ்நாட்டில் அரசர் பலர் புத்தசைன மதங்களைத் தழுவியிருந்தார்கள். சில காலத்துக்குப்பின் புத்தசைன மதங்களுக்கு மாறான உணர்ச்சி தமிழ்நாட்டில் எழுந்தது. சைவவைணவ மதாசாரியர்கள் தோன்றினார்கள். அவர்கள் சைவ மதத்தையும் வைணவ மதத்தையும் கடைப்பிடிக்கும்படி மக்களிடையே உணர்ச்சியை எழுப்பினார்கள். தேவாரதிருவாசகம் திருவாய்மொழி முதலிய தமிழ்ப்பாடல்களைச் செய்தார்கள். சைவவைணவ ஆலயங்கள் பல எழுந்தன. சைன புத்தமதங்கள் வலிகுன்றின. இக்காலத்து எழுந்த நூல்கள் சமய இலக்கியங்களாகும். பல்லவ அரசர் காலத்தில் வடமொழிக்கும் பிராமணருக்கும் உயர்வு உண்டாயிருந்ததென்று முன்ஓர் இடத்திற்படித்தோம். சமய இலக்கியங்கள் தோன்றிய காலத்து அக் கொள்கைகளே வலியுறுத்தப் பட்டன. அதனால் ஆலயங்களில் ஆரியம் வழங்கலாயிற்று; கோயிற் குருக்களாகிய பார்ப்பனரின் மொழி ஆரியம் எனக் கருதப்படலாயிற்று, தமிழ், ஆரியத்துக்கு இரண்டாவதாகத் தூரத்தில் நின்று ஓதுவாரால் ஓதப்படலாயிற்று. இவ்வாறு சமய காலத்தில் தமிழ்மொழியின் நிலை மாறுபடலாயிற்று. தமிழ்மக்கள் இம் முறையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் எதிர்த்தே வந்தார்கள். இன்னும் அவ்வகை எதிர்ப்பு இருந்தே வருகின்றது.

21. புராண காலம்

சமய காலத்துக்னுகுப்பின் சைவ வைணவ மதங்களுக் கிடையில் போராட்டங்கள் நிகழ்ந்தன. அப்பொழுது ஒருவர் மற்றவர் மதத்தை இகழ்வாராயினர். இம் முறையில் இரு மதத்தவர்களும் தத்தம் மதங்களை உயர்த்தவேண்டிக் கற்பனைக் கதைகள் நிறைந்த புராணங்களை எழுதலாயினர். வடமொழியிலுள்ள சில நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. கச்சியப்பசிவாசாரியார் கந்தபுராணத் தைத் தமிழிற் செய்தார் கம்பர் வடமொழி இராமாயணத் தைத் தமிழில் திருப்பினார். பெருந்தேவனார் பாரதக் கதையை வெண்பாவிற் பாடினார். பின்பு தலபுராணங்கள் பல செய்யப்பட்டன. அக் காலமக்கள் வடமொழியில் உள்ளன வேசமயப் பிரமாணங்களாகும் என்னும் தவறான கருத்து உடையவர்களாக இருந்தார்கள். ஆகவே, புராணங் களைப் பாடுவோர் தாம் பாவன ஏதோத ஒரு வடமொழிப் புராணத்தில் உள்ளன எனக் கூறுவாராயினர். இவ்வாறு எழுதுதல் புராணம் எழுதும் முறையில் ஒன்றாகக் கருதப்படலாயிற்று. இப் பொய்யான வழக்கினாலேயே பழைய புராணங்களிற் காணப்படும் சில உண்மை வரலாறு களையும் இக்காலத்தார் ஏற்றுக் கொள்ள மறுப்பதாகும். சொற்சுவை, பொருட் சுவைகளுக்காக மாத்திரமன்றி வடமொழியிலிருந்து வந்தன என்னும் கருத்துப்பற்றியும், கந்தபுராணம் இராமாயணம், பாரதம், தலபுராணங்கள் முதலியவைகளுக்கு மதிப்பு உண்டாயிருந்தது.

தெய்வ மறையாம் செந்தமிழ்ப் பிதாமொழி
ஆரிய நங்கையோ டணைந்து கலந்து
காவிய நடையாங் கவிகள் பொழிய
பொலிவுபெற் றிருப்பது புராண காலம்.

மணிப் பிரவாள நடை

புராண காலத்தில் தமிழ்நடை மணிப் பிரவாளம் என்னும் நடையாகவும் வழங்கிற்று. மணிப்பிரவாளமென்பது சரிக்குச் சரி தமிழும் வடமொழியும் கலந்து வழங்கும் நடை. வைணவரே இவ்வகை நடையைப் பெரிதும் ஆண்டார்கள் எனக் கருதப்படுகின்றது. பாரதவெண்பாவின் இடையிடையே காணப்படும் வசன நடை இந்நடையில் அமைந்துள்ளது. தமிழ் இலக்கண விதிகள் சிலவற்றையும் அக்கால வடமொழி வித்துவான்கள் மாற்றமுயன்றனர். ழகரத்துக்கு முன்வரும தகரம், ளகரத்துக்கு முன்வருதல் போலப் புணர்த்தி எழுதப்பட்டது. கச்சியப்ப சிவாசாரியரே தாம் பாடிய கந்தபுராணக் காப்பியத்தில் அவ்வாறு செய்துள்ளார். இவருக்குப் பின்வந்த புத்தமித்திரன் என்னும் வீரசோழிய ஆசிரியர் ழகரத்துக்கு முன்வரும் தகரம் டகரமாக மாறுமென விதி கூறியுள்ளார். கச்சியப்ப சிவாசாரியார் ழகரத்தின் முன் வந்த தகரத்தை டகரமாக மாற்றியதற்கு விதி காணமாட்டாத பிற்காலத்தார் குமாரசாமிக் கடவுளே வீரசோழியத்தைக் கையில் எடுத்துக் கொண்டுவந்து சபையில் காட்டி அதற்குச் சமாதானங் கூறினார் என்னும் கட்டுக்கதை ஒன்றைப் புனைந்து வழங்குவாராயினர்.

22. மடாதிபதிகள் காலம்

புராணகாலத்தின் இறுதியில் மடாதிபதிகள் தோன்றினார்கள். இவர்கள் ஞானம்பெற்று விளங்கிய சித்தர்களின் கால்வழியாகக் குரு மாணாக்க முறையில் வருவோர் என்பது ஐதீகம். இவர்கள், பிராமணர் அல்லாதோர், இவர்கள், தமிழ்மக்களிடையே தோன்றி வளர்ச்சியடைந்த சமய தத்துவக் கொள்கைகளை விளக்கி நூல் செய்தனர். இவர்கள் தமிழை ஆதரித்ததோடு தமிழில் சமய நூல்கள் பல செய்தனர். அவைகளுள் மெய்கண்டார் செய்த சிவஞான போதம் முதன்மையுடையது. இதன்பின் எழுந்த சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் என்னும் நூல்கள் சிவஞான போதத்துக்கு அடுத்தபடியில் சிறப்புடையனவாகக் கொள்ளப்படுகின்றன.

சித்தெலா நிறைந்து சித்தா யமர்ந்த
தேசிகர் மரபில் சிறந்து விளங்கும்
மடாதி பதிகளா மாண்பமை ஞானியர்
அளவிற் படுவதவ் வாதீன காலம்.

(பேரிசைச் சூத்திரம்)

1. உரை ஆசிரியர்கள்

மடாதிபதிகள் காலத்தின் முற்பகுதியில் தமிழ் உணர்ச்சி மக்களிடையே எழுந்தது. மதப் போராட்டங்கள் நிகழ்ந்தபோது பயிலப்படாது கிடந்த தமிழ் நூல்களைக் கற்க மக்கள் பெரிதும் ஆர்வங் கொண்டனர். பழைய

நூல்களுக்குப் பரம்பரை வழக்கில் கேட்கப்பட்ட பொருள்கள் பயில்வாரின்மையின் மறக்கப்பட்டிருந்தன. அப்பொழுது சிலர் தோன்றி அந்நூல்களுக்குச் சிறந்த உரை எழுதுவாராயினர். அவ்வாறு உரை எழுதியவர்கள் உரையாசிரியர்கள் எனப்படுவர். அடியார்க்கு நல்லார் என்னும் புலவர் சிலப்பதிகாரம் என்னும் சிறந்த நூலுக்கு அரிய உரைஎழுதினார். இளம்பூரணர், பேராசிரியர் என்னும் ஆசிரியர்கள் தொல்காப்பியம் முழுமைக்கும் சிறந்த உரை எழுதினார்கள். திருச்சிற்றம்பலக்கோவையாரின் உரையும் பேராசிரியரால் எழுதப்பட்டதெனக் கருதப்படுகின்றது. நச்சினார்க்கினியர் தொல்காப்பியம், கலித்தொகை, சீவகசிந்தாமணி முதலிய நூல்களுக்கு உரையெழுதி யுள்ளார். பரிமேலழகர் திருக்குறளுக்கும், பரிபாடலுக்கும் உரை எழுதினார். அப்பொழுது தமிழ் கற்கும் உணர்ச்சி மக்கள் உள்ளத்திற் கொழுந்துவிட்டெரிந்தது. அக்காலப் புலவர்கள் அந்தாதி, கோவை, தூது, உலா, மும்மணிக் கோவை போன்ற பலவகைப்பிரபந்தங்களைச் செய்வாராயி னர். இக்காலத்திலேயே நன்னூல், நம்பி அகப்பொருள் முதலிய நூல்களும் எழுதப்பட்டன.

2. மடாதிபதிகள் காலத் தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சியடைதற்குக் காரணம்

ஆள்பவர்களின் ஆதரவைப் பெறாவிடில் மொழி எளிதில் வளர்ச்சியடைய மாட்டாது. பல்லவர் ஆட்சிக்குப்பின் தமிழ் அரசர்கள் மறுபடியும் வலிமை எய்தினர். அவர்களுட் சிலர் வடக்கே கங்கைக்கரை வரையிலும் தெற்கே இலங்கை

சுமத்திரா யாவா வரையிலும் தமது வெற்றியை நிலைநிறுத்தினர். அக்காலத்தில் தமிழ்நாட்டில் ஆதரவற்றுக் கிடந்த கலைகளுக்கு அரசரின் ஆதரவு கிடைத்தது. தமிழ்ப்புலவர்கள் அவர்களால் நன்கு மதிக்கப்பட்டனர். ஆகவே, தமிழ் வளர்ச்சியடைவதாயிற்று. கம்பர், ஒட்டக்கூத்தர், காளமேகம் போன்ற பெரும் புலவர்கள் தோன்றி விளங்கினார்கள். இவ்வுந்துதலினால் தோன்றிய எழுச்சி விரைவில் ஓய்ந்துவிடவில்லை. கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களைத் தொடர்ந்து பிற்காலங்களிலும் புலவர்கள் பலர் தமிழ் நாட்டில் தோன்றினார்கள். இரட்டையர், படிக்காசுப்புலவர், அருணகிரிநாதர், வில்லிபுத்தூரார் முதலிய புலவர்கள் பெரும்புகழ் பெற்று விளங்கினார்கள். தமிழ் அரசர்கள் வலிபெற்றிருந்த காலத்தில் தமிழ் உயர்நிலையடைந்தும், அவர் வலி குன்றிய காலத்தில் வீழ்நிலை எய்தியும் இருந்தமையை நாம் காண்கின்றோம். இன்றும் பிரபுக்களும் அரசினரும் தமிழ்க் கல்விக்கு ஆதரவு காட்டினன்றி அது மேல்நிலை எய்துதல் அரிது.

23. வசன காலம்

இற்றைக்கு முந்நூறு ஆண்டு அளவில் ஐரோப்பியப் பாதிரிமார் இந்திய நாட்டை அடைந்தார்கள். அவர்களது வருகையின் நோக்கம் கிறித்துவமதத்தை இந்திய மக்களிடையே பரப்புவதாகும். அவர்கள் தமது மதக் கொள்கைகளை மக்கள் பேசும் மொழியில் அவர்களுக்குப் போதிக்க

வேண்டியிருந்தது. தென்னிந்திய நாட்டை அடைந்த கிறித்துவப்பாதிரிமாருள் வீரமாமுனிவர் என்னும் புனைபெயர் வைத்துக் கொண்ட இத்தாலியர் சிறந்தவர்.★ இவர் கிறித்துவ கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். போர்த்துக்கேசியரின் ஆட்சி இந்தியாவின் பகுதிகளில் இருந்த காலத்தில் அவர்கள் தமது மதமாகிய கத்தோலிக்கத்தை மக்களிடையே பரவச் செய்தனர். பின்பு டச்சுக்காரர் வெற்றியாளராக வந்தபோது புரத்தஸ்தாந்து மதம் பரப்பப்பட்டது. இந்திய நாட்டை அடைந்த வீரமாமுனிவர் தமிழ்மொழியை ஊக்கத்துடன் பயின்றார்; அம் மொழியில் செய்யுள் செய்யவும், வசனநடை எழுதவும் வல்லுநரானார்.

வீரமாமுனிவர் காலத்தில் தமிழ்வசன நடை வளர்ச்சியடைந்திருக்கவில்லை. மேல்நாட்டு மொழிகளில் வசனநடை வளர்ச்சியடைந்திருந்தது. ஆகவே, இவர் அந் நடையைப் பின்பற்றித் தமிழில் வசன நூல்கள் எழுதுவாராயினர். இவர் எழுதிய வசன நூல்களில் ஒன்று அவிவேக பூரண குரு கதை. அந்நூலைக் ''கிழக்கு இந்தியக் கம்பெனியார்'' அக்காலத்தில் அச்சிட்டுள்ளார்கள். அதில் எழுதப்பட்டுள்ள வசனநடை, சொல்வைப்புமுறைகள் திருத்தம் உடையனவாகத் தோன்றவில்லை. பிற்காலத்தில் அதனை அச்சிட்டவர்கள் அந்நடையைச் செப்பஞ் செய்திருக்கின்றனர். அவர் தொன்னூல் என்னும் ஓர்

* இவரின் உண்மைப்பெயர் கொன்ஸ்தாந்தி பெஸ்கி. இவர் பிராமணர்களைப்போலவே உடுத்து உண்டு வாழ்ந்தார். இவர் பிராமணச் சமையலாளரையே அமர்த்தி யிருந்தார்

இலக்கணமுஞ் செய்துள்ளார். அதற்கு அவர் எழுதிய உரையின் பல பகுதிகள் செய்யுள்போலவே செல்கின்றன. அவர் செய்துள்ள செய்யுள் நடை அக்காலப் புலவர்களின் நடையை ஒப்பவே காணப்படுகின்றது. பெரும்பாலும் கிறித்துவமதப் பாதிரிமார் தமது மதத்தைப் பரப்பும் நோக்கமாகத் தமிழைப் பயின்று தமிழில் வசனநூல்களை எழுத முயன்றதினாலேயே தமிழ்வசன நடை சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து இன்றைய நிலையை அடைந்துள்ள தெனக் கூறலாம். புதிதாக ஒரு மதத்தை ஒரு நாட்டிற் பரப்ப முயல்வோர் அந் நாட்டவர் மொழியைப் பயின்று அம் மொழியில் நூல்கள் செய்து மக்களைத் தம்பால் இழுக்க முயல்வது வழக்கம். கிறித்துவமதத்தினருக்கு முன் தென்னாட்டை அடைந்த புத்த சைன மதத்தினரும் கிறித்துவ பாதிரிமாரை ஒப்பவே தமிழ் மொழியைக் கற்று அம் மொழியில் நூல்கள் செய்வாராயினர். இன்று காவியங்கள் என்றும் இலக்கணங்கள் என்றும் நாம் பயில்வன பெரும்பாலும் அவர்களால் எழுதப்பட்டனவே. தமிழுக்காக மிக உழைத்த கிறித்துவப் பாதிரிமாருள் டாக்டர் கால்ட் வெல், டாக்டர் போப், டாக்டர் ஒப்பேட் முதலானோர் சிறந்தவர்களாவர்.

கிறித்துவ சமயம் தென்னாட்டில் பரவியபோது கிறித்துவ வேதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இப்பொழுது அச்சிடப்பட்டிருக்கும் கிறித்துவ வேதத்தின் பழைய புதிய ஏற்பாடுகளின் தமிழ் மொழிபெயர்ப்பு யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் அவர்களாற் செய்யப்பட்டதாகும்.

தொடக்கத்தில் தமிழ்மக்கள் ஆங்கிலங் கற்க மறுத்தல்

கிழக்கு இந்தியக் கம்பெனியார் காலத்தில் ஆங்கில மக்கள் பலர் சென்னையில் 'கம்பெனிகள்' வைத்து நடத்தினர். அவர்கள் தமிழ் அறியாதிருந்தமையின் தொழிலாளிகளுடன் பேசுவதற்கு மொழிபெயர்ப்பாளரை வைத்திருந்தனர். இத்தொல்லையை ஒழிக்கும் பொருட்டுக் 'கம்பெனிகளில்' வேலைசெய்வோர் ஆங்கிலம் பயில வேண்டுமென்று கம்பெனி அதிகாரிகள் வற்புறுத்தினர். இதனைத் தொழிலாளர் சில காலம் எதிர்த்து நின்றனர். பின்பு வேலை ஒழிவுக்குப்பின் ஒரு மணிநேரம் ஆங்கிலம் பயில்வோருக்கு ஒன்று அல்லது இரண்டு ரூபாக்கள் ஊதியம் கொடுப்பதாகக் கம்பெனியார் கூறினர். பணவிருப்பினால் பலர் ஆங்கிலம் கற்கப் புகுந்தனர். அவர்களுக்குப் பின் வந்தோர் தாமே பணங்கொடுத்து ஆங்கிலங் கற்கத் தொடங்கினர். கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் மேல் நாட்டவர்கள் தமிழ் கற்பதற்கேற்ற தமிழ் இலக்கணங்களும் நூல்களும் இலத்தீன் ஆங்கில மொழிகளில் எழுதப்படலாயின.

24. தமிழ்க் கிளர்ச்சி

இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளின்முன் தமிழ் பயிலும் கிளர்ச்சி உச்சநிலை அடைந்திருந்தது. அன்று மனோன்மணீய ஆசிரியரான சுந்தரம்பிள்ளையவர்கள் தோன்றித் தமிழ் உணர்ச்சியை எழுப்பும் பாடல்கள்

சிலவற்றைச் செய்தார். ''சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின், முதுமொழிநீ யனாதியென மொழிகுவதும் வியப்பாமே'' என்பது போன்று தமிழ்க் கூட்டங்களிற் பாடப்படும் பாடல்கள் பல அவராற் செய்யப்பட்டனவே. ஆறுமுக நாவலர் தோன்றி வசன நூல்கள் பல செய்ததோடு பலருக்கு அக்காலத்தில் எளிதிற் கிடைக்கமுடியாதிருந்த பல நூல்களை அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். பி. கனகசபைப்பிள்ளை என்பார் தமிழரின் பெருமையை உலகு அறிந்துகொள்ளுமாறு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் என்னும் தமிழுலகம் போற்றும் நூலை எழுதி வெளியிட்டார். சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தொல்காப்பியம், கலித்தொகை, வீரசோழியம் போன்ற பல நூல்களை ஏடுகளினின்றும் பெயர்த்தெழுதி அச்சிட்டுத் தமிழ் உலகுக்கு உதவினார். டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களும், அவர் வெளியிடாதொழிந்த பிற பல சங்க நூல்களை நல்ல முறையில் அச்சிற் பதித்து வெளியிட்டனர். இவ்வாறு சென்ற ஐம்பதாண்டுகளில் தமிழ் பெரிதும் வளர்ச்சியடைவதாயிற்று.

முற்கால நடையும் இக்கால நடையும்

ஒரு நூற்றாண்டுக்குட்பட்ட மக்கள் தமிழுடன் சமக்கிருதச் சொற்களைக் கலந்து எழுதுவதின் தவறை உணரவில்லை. அவர்கள் தமிழ் சமக்கிருதத்திலிருந்து பிறந்ததென்றும் அதனால் தமிழோடு வடசொற்களைக் கலத்தல் குற்றம் ஆகமாட்டாதென்றும் அவ்வாறு

கலத்தலால் தமிழுக்குப் பெருமை உண்டாகின்றதென்றும் தவறாக நினைத்தார்கள். ''ஐந்தெழுத்தால் ஒருபாடை என்றறையவே நாணுவரறிவுடையோரே'' எனச் சுவாமிநாத தேசிகர் என்னும் ஒருதமிழ்ப்புலவரே தமிழை இழித்துரைத்தமை காண்க. ஆசிரியர் சுந்தரம்பிள்ளை காலத்துக்குப்பின் தமிழ்மக்களுக்குச் சிறிது சிறிதாகச் சரித்திரக்கண் திறக்கலாயிற்று. அப்பொழுது அவர்கள், தமிழைச் சீர்திருத்தியது ஆரியமன்று; ஆரியத்தைச் சீர்திருத்தியதே தமிழ் எனக் கண்டார்கள். அந்நாள்முதல் தமிழ்மொழியில் பிறமொழியைக் கலவாது எழுதுதலே சிறந்த நடை எனக் கருதப்பட்டு வருகின்றது. இன்றைய கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகள் முதலியவைகளின் நடையையும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் காலநடையையும் நோக்கி இரு நடைகளின் வேறுபாடுகளையும் அறிந்துகொள்க. நன்கு தமிழ் கற்காத ஒரு சாரார் வடசொற்களை மாத்திரமன்று, வடஎழுத்துகளையுமே பெரிதும் தமிழோடு கலந்து எழுதி வருகின்றனர். இலக்கண நூலாசிரியர்களே அவ்வாறு செய்தலாகாதென விதி கூறியிருக்கின்றனர். ஆங்கிலம் முதலிய பிற மொழிகளை நினைத்தவர் நினைத்தவாறு எழுத முடியாது; எழுதின் பெரிதும் இகழப்படுவர். தமிழ்மொழியை நினைத்தவர் நினைத்தவாறெல்லாம் எழுதிவருதலைக் காண்கின்றோம். தமிழ்நடைப் போக்கைப் பாராமுகஞ் செய்யின் நாளடைவில் தமிழ் மிகவுஞ் சீரழிந்துவிடுமென்பதில் ஐயமில்லை. தமிழ் நடை கெட்டுப்போவதற்குக் காரணம் ஒரு சமூகத்தினர் தமிழிலும்

பார்க்கச் சமக்கிருதமே தமக்குச் சொந்தமுடையது எனக் கருதிவருகின்றமையேயாகும். அக்கூட்டதினர் இன்று தோன்றியவர்கள் அல்லர்; நக்கீரர் காலத்திலேயே இருந்தார்கள் என அறிகின்றோம். நக்கீரர் ''ஆரியம் நன்று தமிழ் தீது'' என உரைத்த ஒருவனைச் சாவப் பாடினார் என்னும் பழங்கதை வழங்குகின்றது.

25. தமிழ்ப்புலவர்கள் சிலர்

தமிழ்மொழியைப் பற்றிக் கற்போர் தமிழோடு பெரிதும் தொடர்புடைய புலவர் சிலரைப்பற்றி அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதது. அவர்கள் வரலாறும் தமிழ் வரலாற்றினை ஓரளவு துலக்குவதாம்.

1. அகத்தியர்

அகத்தியருக்கும் தமிழுக்கும் மிகத் தொடர்புண்டு. அகத்தியரே தமிழுக்கு முதலில் இலக்கணஞ் செய்தார் என்பது பழங்கதை. இவரைப் பற்றிய வரலாறுகள் நன்கு அறியப்படவில்லை. தமிழ்நாட்டிலும் வடநாட்டிலும் அகத்தியர் என்னும் பெயருடைய பலர் வாழ்ந்தார்கள். வடமொழி வேதபாடல்கள் சிலவற்றைச் செய்த ஓர் அகத்தியரும் காணப்படுகின்றார். அகத்தியரைப்பற்றிய கதைகள் இராமாயணகாலம் முதல் தேவாரங்களுக்குப் பிற்பட்ட காலம்வரையில் அறியப்படுகின்றன. இதனால் அகத்தியர் என்னும் பெயருடன் பல்வேறு காலங்களில் பலர் வாழ்ந்தார்கள் என ஆராய்ச்சியாளர் முடிவு செய்திருக்கின்றனர். பொதிய மலையில் வாழ்ந்த அகத்தியர், தமிழ்

மொழிக்கு இலக்கணம் செய்தார் என்னும் பழங்கதை ஒன்று வழங்குகின்றது. உரையாசிரியர்கள் காலத்தில் அகத்தியம் என்னும் இலக்கண நூல் இருந்தது. அவர்கள் அகத்தியத்திலிருந்து மேற்கோள்கள் எடுத்தாண்டிருக்கின்றனர்.

இவர் வடநாட்டினின்றும் வந்தவர் எனப் புராணக் கதையுண்டு. இதனைக்கொண்டு இவர் ஆரியர் எனச் சிலர் சாதிப்பர். வடநாட்டில் வாழ்ந்தவர்கள் எல்லோரும் ஆரியரல்லர். வடநாட்டின் ஆதிக்குடிகள் தமிழரேயாவர். ஆகவே, அகத்தியரை ஆரியர் என்று துணிவதற்கு ஏற்ற ஆதாரங் கிடைக்கவில்லை.

படம்

1. இது சிவபெருமான் அகத்தியருக்குத் தமிழ் இலக்கணத்தை உபதேசித்தார் என்னும் ஐதீகத்தைத் தழுவி வரையப்பட்ட கற்பனை ஓவியம்.

2. இது 4000 ஆண்டுகளுக்கு முன் பபிலோனிய அரசனாகிய கமுரபி என்பவனுக்கு ஞாயிற்றுக் கடவுள் சட்டங்களை அருளிச் செய்தார் என்னும் செய்தியை விளக்கும் பழங்காலச் சிற்பம். தமிழ்நாட்டில் மாத்திரமன்று; பிறநாடுகளினும் மக்களுக்குக் கடவுள் சட்டங்களையும் மொழியையும் அருளிச்செய்தா ரென்னும் ஐதீகம் இருந்து வந்ததென்பதை விளக்க இவ்வோவியங்கள் தரப்பட்டுள்ளன.

2. தொல்காப்பியர்

அகத்தியருக்கு அடுத்தபடியில் தொல்காப்பியர் தமிழோடு மிகத் தொடர்புடையராவர். இவர் அகத்திய ரிடத்திற் பாடம் பயின்ற பன்னிருமாணவருள் ஒருவர் எனப் பிற்காலநூல்கள் கூறுகின்றன. இவர் செய்த நூல் தொல்காப்பியம் என்னும் இலக்கணமாகும். தொல்காப்பி யம் என்பதற்குப் பழைமையைக்காக்கும் நூல் என்பது பொருள். தொல்காப்பியம் என்னும் நூல் செய்தமையின் இவருக்குத் தொல்காப்பியர் என்னும் பெயர் வழங்குவ தாயிற்று. இவரது இயற்பெயர் யாது என்று விளங்கவில்லை. தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனார் என்னும் புலவர் சிறப்புப்பாயிரம் செய்துள்ளார். அது தொல்காப்பியம் எழுதப்பட்டு நீண்ட காலத்துக்குப்பின் செய்யப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தைப்பற்றி அக்காலம் வழங்கிய கன்ன பரம்பரைக்கதைகளையெல்லாம் திரட்டி அப் பாயிரம் செய்யப்பட்டுள்ளது. அப்பாயிரத்துள் தொல்காப்பியர் - அகத்தியர் மாணவர் என்று கூறப்பட்டிருக்கவில்லை. ஆகவே அவர் அகத்தியரிடத்தில் கல்வி பயின்றவர் என்னும் வரலாறு நம்பத்தக்கதன்று தொல்காப்பியம் நிலந்தரு திருவிற்பாண்டியன் என்னும் ஓர் அரசன் அவையில் அரங்கேற்றப்பட்டது. அப்போது அதங்கோட்டாசிரியன் என்னும் புலவர் அவ்வவைக்குத் தலைமை தாங்கியிருந்தார். தொல்காப்பியர் ஐந்திரம் என்னும் நூலை நன்றாகக் கற்றிருந்தார். ஐந்திரம் என்பது இந்திரன் என்பவனாற் செய்யப்பட்டது. இந்திரனின் தலைநகரம் கிருஷ்ணாநதி முகத்துவாரத்திலுள்ள அமராவதி. இந்திரன் மதுரைக்குச்

சென்று சோமசுந்தரக் கடவுளை நோக்கித் தவங்கிடந்த வரலாறு திருவிளையாடற் புராணத்திற் காணப்படுகின்றது. ஆகவே, ஐந்திரம் என்பது அக்காலத்தில் தென்னாட்டிலே வழங்கிய யாதோ ஒரு நூல் எனத் தெரிகின்றது.

இன்று தமிழிலே காணப்படும் நூல்களுள் தொல் காப்பியம் மிகப் பழைமையுடையது. அதற்கு முற்பட்ட இலக்கணங்களும் இலக்கியங்களும் அழிந்துபோயின. இவர் தென்னாட்டு வழக்குகள் சிலவற்றை வடநாட்டு வழக்குகளோடு ஒப்பிட்டுக்காட்டியுள்ளார். இதனால் அக்காலத்தில் வடநாட்டவர்கள் தென்னாடு போந்திருந் தார்கள் என விளங்குகின்றது. வடநாட்டுப் பிராமணரும் தென்னாட்டுப் பார்பனரும் வெவ்வேறு வகுப்பினர் என்பது எவரும் அறிந்ததே. வடநாட்டுப் பிராமணரையும் இவர் அந்தணர் எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே வீரமாமுனிவரும் கத்தோலிக்கக் குருமாரை வேதியர் எனக்கூறியுள்ளார். ஆகவே, தொல்காப்பியத்தில் வரும் அந்தணர், மறை என்னும் சொற்களுக்கு இடமறிந்து பொருள்கொள்ளுதல் வேண்டும்.

3. திருவள்ளுவர்

திருக்குறள் செய்த புலவரின் பெயர் திருவள்ளுவர். வள்ளுவர் என்பது குலப்பெயர். அரசனின் கருமத் தலைவருள் ஒருவனும் வள்ளுவன் எனப்பட்டான். யானைமேலேறி அரசன் கட்டளையை மக்களுக்கு அறிவித்தல் அவன் தொழில். வள்ளுவரின் இயற்பெயர்

மறக்கப்பட்டது. ஆகவே அவர் குலப்பெயரினால் அறியப்படுவாராயினர். இவர் ஆதி என்னும் பறைச்சிக்கும் பகவன் என்னும் அந்தணருக்கும் மகவாகத் தோன்றியவர் எனக் கபிலரகவல் என்னும் நூல் கூறுகின்றது. கபிலர் சங்க காலத்தில் வாழ்ந்தவராவர். இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட ஞானாமிர்தம் என்னும் நூலில் இவரின் தந்தை ஞாளிதத்தர் என்னும் பார்ப்பான் என்றும் தாய் புலைச்சி என்றும் கூறப்பட்டுள்ளன. கபிலர் அகவல் சங்ககாலத்தில் தோன்றியுள்ளதாயின் ஞானாமிர்தக்காரர் திருவள்ளுவரின் தாய் தந்தையர் பெயர்களை மாறுபாடாகக் கூறியிருக்கமாட்டார். ஆதலினால் கபிலர் அகவல் பிற்காலத்தைய நூல் எனக் கருதப்படுகின்றது. திருவள்ளுவர் நெசவுத்தொழிலையே தமது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தார் என நம்பப்படுகின்றது.

திருவள்ளுவர் அக்காலத்தில் தமிழர்களிடையே வழங்கிய நீதிகளை எல்லாம் திரட்டித் திருக்குறள் என்னும் நூலாகச்செய்தார். இந்நூல் சொல்லாழமும் பொருளாழமும் உடையது. இந்நூலின் அருமையை நோக்கி மேல்நாட்டவர்கள் இதனைச் செர்மன்மொழி, இத்தாலியமொழி, ஆங்கிலமொழி, பிரெஞ்சுமொழி முதலிய பல மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார்கள். இந் நூல் கிறித்துவ ஆண்டின் முற்பகுதியில் அல்லது அதற்குச் சிறிதுமுன் செய்யப்பட்டதெனக் கருதப்படுகின்றது. திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளார்கள். அவர்கள் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர்மல்லர், கவிப் பெருமாள், காளிங்கர் என்போர். அவ்வுரைகளுள்

பரிமேலழகர் உரையே சிறப்புடையதாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. பரிமேலழகர் காலத்தில் வடமொழி நூல்களைப் பின்பற்றியே தமிழ்நூல்கள் செய்யப்படுகின்றன என்னும் பிழைபட்ட கருத்து பெரும்பாலார் உள்ளத்தில் இருந்துவந்தது. இப்பிழைபட்ட கருத்தினால் பரிமேலழகர் திருக்குறளின் சில செய்யுட்களுக்குப் பிழைபட்ட கருத்து களைக் கூறியுள்ளார். பிற்காலங்களில் அவர் பிழைபோன விடங்களைத் தமிழறிஞர் எடுத்து விளக்கியுள்ளார்கள்.

திருவள்ளுவர் எச் சமயத்தைச் சேர்ந்தவர் என்று அறிதல் முடியாது. அவர் மயிலாப்பூரில் வளர்ந்தவராகக் கபிலரகவல் கூறுகின்றது. அங்கு அவருக்குத் திருக்கோயிலும் உண்டு.

4. நக்கீரர்

நக்கீரர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர் எனப்படுகின் றார். இவர் அந்தண குலத்தவர் என்பது கன்னபரம்பரை வரலாறு. இவர் தந்தை கணக்காயர் எனப்பட்டார். கணக்காயரென்பது உவாத்தியாயருக்கு அக்காலத்தில் வழங்கியபெயர். இவர் தமிழில் பெரும் புலமை அடைந்திருந்தார். இவரது புலமையை விளக்குவதற்கு இவர் சிவபெருமானோடு வாது புரிந்தார் என்பது போன்ற கற்பனைக் கதைகள் எழுந்தன. இவர் பல தனிப் பாடல்கள் செய்திருக்கின்றார். அப்பாடல்கள் சங்கத்தொகை நூல்களுள் சேர்க்கப்பட்டுள்ளன. இவர் பாடிய திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்னும் இரு பாடல் பத்துப்பாட்டில் உள்ளன. முருகாற்றுப்படையில் முருகக்கடவுளின் பெருமை கூறப்பட்டுள்ளது.

இவர் காலத்துக்குமுன் இறையனார் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் களவியல் என்னும் ஒரு நூல் செய்தார். அந் நூலைச் செப்பு ஏடுகளில் எழுதி யாரோ ஓர் அர்ச்சகர் கோயிற் பீடத்தின்கீழ் மறைத்து வைத்தார். நக்கீரர் காலத்தில் அந் நூல் கண்டு எடுக்கப்பட்டது. அந் நூலுக்கு உரைசெய்யும்படி அரசன் புலவர் பலரைக் கேட்டான். அந் நூலுக்கு நக்கீரர் செய்த உரை சிறந்ததெனக் கொள்ளப் பட்டது. நக்கீரர் செய்த உரை ஏட்டில் எழுதி வைக்கப்பட வில்லை; நீண்டகாலம்வரை செவி வழக்கில் வந்தது. முற்கால மக்கள் வியக்கத்தக்க ஞாபகசக்தி உடையவர் களாயிருந்தார்கள். அவர்கள் ஒருவர் சொல்வதை ஒரு முறை இரு முறை கேட்டு ஞாபகத்தில் வைத்திருக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர். இதுபற்றியே ''வெண்பா இருகாலிற் கல்லானை'' என்பது போன்ற பாடல்கள் தோன்றின. புத்தகங்கள் அச்சேறத் தொடங்கியபின் மக்கள் பாடல்களை ஒருமுறை அல்லது இருமுறை கேட்டு ஞாபகத்தில் வைத்திருத்தலாகிய ஆற்றலை இழந்தனர். நக்கீரர் செய்த உரை நீண்டகாலம் செவி வழக்கில் வருவதாயிற்று. இறுதியில் புலவர் ஒருவர் அதனை ஏட்டில் எழுதிவைப்பாராயினர். அவ்வுரை இறையனார் களவியல் உரை எனப்படும்.

5. இளங்கோவடிகள்

நக்கீரருக்குப்பின் சிறந்த தமிழ்நூல் செய்தவர், இளங்கோவடிகள்; இளங்கோவடிகள் என்பது அவரின் இயற்பெயரன்று. இளங்கோவடிகள் என்பதற்கு

இளவரசராகிய துறவி என்பது பொருள். இவர் சேரன் செங்குட்டுவன் என்னும் சேர அரசனின் தம்பி. ஒருபோது இவரும் செங்குட்டுவனும் உடன் இருந்தனர். அப்பொழுது வந்த நிமித்திகன் ஒருவன் தமையனிருக்கத் தம்பியாகிய இளங்கோவடிகளே முடிதரித்து அரசாளுவர் எனக் கூறினான். அதைக் கேட்ட இளங்கோவடிகள் உடனே துறவு பூண்டார். இவரின் சமயம் யாது என்று உறுதியாக அறிவதற்கில்லை. இவர் சைன மதத்தைக் கைக்கொண்டிருந்தாரென்று சிலர் கருதுவர். இவர் காலத்தில் கோவலன் பாண்டிய அரசனால் கொலையுண்டான். அந் நிகழ்ச்சியைப் பற்றிய வரலாறு அக்கால மக்களால் பெரிதும் விரும்பிக் கேட்கப்பட்டு வந்தது. இளங்கோவடிகள் அவ்வரலாற்றினை முறைப்படுத்தி அழகிய நூலாகச் செய்து அதற்குச் சிலப்பதிகாரம் எனப் பெயரிட்டார். இந்நூல் சொற்சுவை பொருட்சுவை செறிந்தது. இது வரலாற்றுப் பெருமையும் உடையது. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் அமைத்து விழா எடுத்தான். அப்போது இலங்கை வேந்தனாகிய கயவாகுவும் வந்திருந்தான். இதனால் சேரன் செங்குட்டுவனும் கயவாகுவும் ஒரு காலத்தவர்கள் எனத் துணியப்படுகின்றது. கயவாகுவின் காலம் கிறித்துவுக்குப் பின் இரண்டாம் நூற்றாண்டு. ஆகவே, சேரன் செங்குட்டுவனும் இளங்கோவடிகளும் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது நன்கு உறுதிப்படுகின்றது. கயவாகு இலங்கைத் தீவிலும் கண்ணகி வழிபாட்டைத் தொடங்கினான். சிங்கள மக்கள் சிலம்பை ஆலயங்களில் வைத்து வணங்கினார்கள். அவர்கள் கண்ணகியைப் ''பத்தினிதேவோ'' என்னும் பெயர் கொடுத்து வழிபட்டனர்.

இன்னும் கொழும்பு நகரிலுள்ள நூதனபொருட்காட்சிச் சாலையில் சிங்கள மக்கள் வழிபட்ட நூற்றுக்கணக்கான பத்தினிச் சிலம்புகள் காணப்படுகின்றன.

இலங்கையின் வடபகுதியிலும் மேற்குப் பகுதியிலும் இன்றும் பத்தினிக்கடவுளுக்குப் பல கோயில்கள் உண்டு.

சிலப்பதிகாரத்தை நோக்குமிடத்து முற்கால அரசர்கள் தமிழில் மிக்க திறமை உடையவர்களாயிருந்தார்கள் என விளங்குகின்றது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் செய்த நாட்டில் இன்று மலையாளம் வழங்குகின்றது. நம்பூதிரிப் பிராமணர் நாயர்ச்சாதியினருடன் கலந்தமையால் தமிழ் வடமொழியோடு கலந்து மலையாளமாயிற்று எனக் கருதப்படுகின்றது. சிலப்பதிகாரம் திருக்குறளைப்பற்றிக் கூறுகின்றது. இதனால் திருக்குறள் இளங்கோவடிகள் காலத்துக்கு முற்பட்ட நூலென்று தெளிவாகத் தெரிகின்றது.

6. சீத்தலைச் சாத்தனார்

இவர் சீத்தலை என்னுமிடத்தைத் தமக்குப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆகவே, இவர் சீத்தலைச் சாத்தனார் எனப்பெயர் பெற்றார். இவர் கூலப்பொருள் கொண்டு வாணிகம் செய்தார். புத்த சமயத்தைத் தழுவியிருந்தார். இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் ஒரே காலத்தவர். இளங்கோவடிகள் கண்ணகிக்குக் கோயில் எடுக்கப்பட்ட வரலாறு வரையில் தனது நூலிற் கூறியுள்ளார். இவர் கோவலனின் மகளாகிய மணிமேகலை என்பாள் துறவொழுக்கம் பூண்டு இருந்த வாழ்க்கையை நூலாகப்

பாடி அதற்கு மணிமேகலை எனப்பெயரிட்டார். அது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். ஐம்பெருங் காப்பியங்களாவன; சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்னும் நூல்கள். மணிமேகலை புத்த சமயக் கொள்கைகளைப் பெரும்பாலும் எடுத்துக் கூறுகின்றது.

திருக்குறளைப்பற்றிச் சிறப்பித்துப் பாடப்பட்ட பழைய பாடல்கள் சில உண்டு. அவைகளின் தொகுதி திருவள்ளுவ மாலை எனப்படும். அப் பாடல்களுள் மருத்துவன் தாமோதரனார் பெயரால் ஒரு பாடல் காணப்படுகின்றது. அப் பாடல், எவரேனும் தமிழைப் பிழைபட வழங்கக் கண்டால் சாத்தனார் கையால் தமது மண்டையில் அடித்துக் கொள்வரென்றும் அதனால் அவர் தலையில் எப்பொழுதும் சீழ் வடிந்து கொண்டிருக்குமென்றும் பொருள்பட அமைந்துள்ளது. திருவள்ளுவ மாலையிலுள்ள பாடல்கள் சங்ககாலப் புலவர்களாற் பாடப்பட்டனவல்ல; பிற் காலத்தில் யாரோ புலவர் ஒருவராற் பாடப்பட்டவை. அப் புலவர் சீத்தலை என்பது ஊரின் பெயரென்றறியாததனால் அதனைச் சீழ்த்தலை எனப் பொருள்கொண்டு பாடல் செய்திருக்கின்றார். ஆகவே, திருவள்ளுவ மாலையிற் காணப்படும் பாடல் உண்மையுணர்த்தியதன்று.

7. திருத்தக்கதேவர்

சீவகசிந்தாமணி என்னும் அரிய தமிழ் இலக்கியத்தைச் செய்த புலவர் திருத்தக்கதேவராவர். இவர் சிறிதேறக்குறைய

ஆயிரத்து நூறு ஆண்டுகளின் முன் வாழ்ந்தார். இவரது சமயம் சைனம், சைன மதமென்பது புத்தர் காலத்தில் வாழ்ந்த மகாவீரர் என்பவராற் றோற்றுவிக்கப்பட்ட மதம், திருஞான சம்பந்தர் காலத்தில் இருந்த கூன்பாண்டியன் இம் மதத்தைத் தழுவியிருந்தான். திருநாவுக்கரசு நாயனார் இளமையில் கைக்கொண்டிருந்த மதம் இதுவே. சைன மதம் ஒருகாலத்தில் தென்னிந்தியாவில் வலிபெற்றிருந்தது. திருத்தக்கதேவர் மயிலாப்பூரில் பிறந்தவர் எனக் கருதப்படுவர். இவரின் பிறப்பு வளர்ப்பு ஆகிய வரலாறுகள் மறைவாகவே இருக்கின்றன. நரிவிருத்தம், சீவகசிந்தாமணி என்னும் இரு நூல்களை இவர் செய்துள்ளார். சீவகசிந்தாமணி என்பது திருத்தக்கதேவர் காலத்துக்குமுன் வழங்கிய ஒரு கற்பனைக் கதையை அழகிய செய்யுட்களாற் பாடிய நூல். சீவக சிந்தாமணியில் 3145 பாடல்கள் உண்டு. இவர் இந் நூலை எட்டுநாளில் பாடி முடித்தார் என்னும் கன்னபரம்பரைக் கதை உள்ளது. அக்கால நூல்கள் பெரும்பாலும் நூல் செய்வோரின் மதக் கொள்கைகளை வலியுறுத்துவதையே இலக்காகக் கொண்டு செய்யப் பட்டன. ஆகவே, சீவக சிந்தாமணியிலும் சைன சமயக் கருத்துகள் காணப்படுதல் இயல்பேயாகும். பெரும்பாலும் கதையில் வரும் தலைவன் எல்லாச் செல்வங்களையும் புலனார நுகர்ந்து அவைகளின் நிலையாமையை உணர்ந்து பின் துறவு பூண்டான் எனச் சைன நூல்கள் முடிவு பெறுதலைக் காணலாம்.

சீவகசிந்தாமணி சொற்சுவை பொருட்சுவை செறிந்த நூலாயிருந்தமையின், அது தமிழ்மக்கள் எல்லோராலும்

விரும்பிப் பயிலப்படுவதாயிற்று. சைனமதக் கொள்கையுடைய சீவகசிந்தாமணி எல்லோராலும் பயிலப்படுவதை நிறுத்துவதற்காகவே பெரிய புராணம் சேக்கிழாரால் பாடப்பட்டதெனச் சொல்லப்படுகின்றது. புத்த சைன மதங்கள் பிராமண மதத்துக்கு மாறானவை; வேள்விகளையும் கிரியைகளையும் கண்டிப்பன.

சீவகசிந்தாமணி எல்லோராலும் விரும்பிப் பயிலப்பட்டமையினாலேயே நச்சினார்க்கினியர் அதற்குச் சிறந்த உரை இயற்றியிருக்கின்றார். தமிழ்ப் புலவர்கள், தமிழென்னும் மாது உச்சியிற்சூடிக்கொள்ளும் சிகரமணி போன்றது சிந்தாமணி என்னும் நூல் என அதைப் பலவாறு புகழ்ந்திருக்கின்றனர்.

8. குண்டலகேசி

குண்டலகேசி என்னும் நூல் யாரால் செய்யப்பட்டது என்று தெரியவில்லை. இது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று எனப் படித்தோம். இந் நூல் புத்தசமயக் கொள்கைகளை விளக்குவது. இதன் வரலாறு பின்வருமாறு.

இராசக்கிருகம் என்னும் நகரத்தை அரசாண்ட அரசனின் மந்திரிக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குப் பத்திரை எனப் பெயரிட்டுப் பெற்றோர் சீராட்டிப்பாராட்டி வளர்த்தார்கள். இவ்வாறு வளர்ந்த அப் பெண்மகவு பெரிதாகி மணஞ்செய்யத்தக்கவயதினையடைந்தது. ஒருநாள், இப்பெண் தன்மாளிகையின் மேற்புரத்தில் உலாவியபோது தெரு வழியே கட்டழகு மிக்க காளை

ஒருவனை அரசனது சேவகர் கொலைக்களத்துக்கு அழைத்துக் கொண்டு போவதைக் கண்டாள். கண்டதும் அக் காளையின்மேற் காதல் கொண்டாள். அவன் அரசனின் புரோகிதன் மகன். வழிப்பறி செய்த குற்றத்திற்காக கொலைத் தண்டனை அடையப் பெற்றுக் கொலைக் களத்திற்கு அழைத்தேகப்பட்டான். இக் குற்றவாளியின் மேல் காதல் கொண்ட பத்திரை அவனையே மணம் புரிவேன்; இன்றேல் உயிர்விடுவேன் என்று பிடிவாதஞ் செய்தாள். இதனையறிந்த இவள் தந்தை கொலையாள ருக்குக் கைக்கூலி கொடுத்து அவனை மீட்டுக் கொண்டுவந்து நீராட்டி ஆடையணிகளை அணிவித்துப் பத்திரையை அவனுக்கு மணஞ் செய்வித்தான்.

மணமக்கள் இருவரும் இன்பமாக வாழும் காலத்தில் ஒரு நாள், ஊடல் நிகழ்ச்சியின் போது, பத்திரை தன் கணவனைப் பார்த்து, 'முன்பு கள்வன் அல்லனோ?' எனக் கூறினாள். அவன், அவள் தன்னை இகழ்ந்தாளெனக் கருதி மிக்க சினங்கொண்டான். ஆயினும், அதனை அப்போது வெளியிற் காட்டாமல் அடக்கிக் கொண்டான்.

பின்னர், ஒருநாள் அவன் பத்திரையை அழைத்து அவளிடம் தன் உயிரைக் காப்பாற்றிய தெய்வத்தை வழிபடும்பொருட்டு அருகிலிருக்கும் மலையுச்சிக்குப் போக விரும்புவதாகவும், அவளையும் உடன் வரும்படியாகவும் கூறினான். அவளும் இசைய, இருவரும் மலையுச்சிக்குச் சென்றனர். மலையுச்சியினை அடைந்தவு டன் அக் கொடியோன் அவளைச் சினந்துநோக்கி, "அன்று நீ என்னைக் கள்வனென்று கூறினாயன்றோ? இன்று

உன்னைக் கொல்லப் போகின்றேன். நீ இறக்குமுன் உனது வழிபடு கடவுளை வணங்கிக் கொள்'' என்றான். இதனைக்கேட்டுத் திடுக்கிட்ட அவள், 'தற்கொல்லியை முற்கொல்ல வேண்டும்' என்னும் முதுமொழியைச் சிந்தித்து அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிபவள் போல நடித்து, ''என் கணவனாகிய உன்னையன்றி எனக்கு வேறு தெய்வம் ஏது? ஆதலின் உன்னையே நான் வலம் வந்து வணங்குவேன்'' என்று சொல்லி அவனை வலம் வருவதுபோற் பின்புறஞ் சென்று, ஊக்கித் தள்ளினாள். இவ்வாறு அக்கொடியவன் மலையுச்சியினின்றும் வீழ்ந்திறந்தான்.

இதன்பிறகு பத்திரை உலகத்தை வெறுத்தவளாய் சைன மதத்தின் பிரிவாகிய நிகண்ட மதத்தில் சேர்ந்து துறவு பூண்டாள். அந்த மதக்கொள்கைப்படி, பத்திரையின் தலைமயிரைக் களைந்து விட்டார்கள். ஆயினும் மீண்டும் தலைமயிர் வளர்ந்து சுருண்டுகாணப்பட்டது. ஆகவே சுருண்டமயிருடையவள் என்னும் பொருள்படும் 'குண்டல கேசி' என்று அவளைக் கூறினர். இப்பெயரே பிற்காலத்தில் இவளுக்குப் பெரும்பாலும் வழங்கப்பட்டது. சில வேளைகளில் இவளது இயற்பெயரையும் காரணப் பெயரையும ஒருங்கு சேர்த்துப் 'பத்திரா குண்டலகேசி' என்றும் சொல்லப்படுவதுண்டு.

சைனமதத்திற் சேர்ந்த குண்டலகேசி சைனர்களிடம் சமய சாத்திரங்களையும் தர்க்க நூல்களையும் கற்றுத்தேர்ந்து, சமயவாதஞ் செய்யப் புறப்பட்டு, சென்றவிடமெங்கும் நாவல்நட்டு, வாதப்போர் செய்து வெற்றிகொண்டு வாழ்ந்தாள். வாதப்போர் செய்வோர் நாவல் மரக்கிளையை

ஊர் நடுவில் நட்டு வாதுக்கு அழைப்பது அக்கால வழக்கம். இவ்வாறு நிகழுங்கால், ஒரு நாள் ஓர் ஊரையடைந்து, அவ்வூர் நடுவில் மணலைக் குவித்து நாவற்கிளை நட்டு, உணவு பெறுவதற்காக வீடுதோறுஞ் சென்றாள். அவ்வமயம் புத்தர் தம் சீடர்களுடன் அவ்வூருக்கருகிலிருந்த ஒரு தோட்டத்தில் வந்திறங்கினார். அவர் சீடர்களிற் சாரிபுத்தர் என்பவர் உணவுக்காக அவ்வூருக்குட்சென்றார். சென்றவர் அங்கு நாவல் நட்டிருப்பதைக் கண்ணுற்று, அதன் காரணத்தை அங்கிருந்தவர்களால் அறிந்து அங்கிருந்த சிறுவர்களை அழைத்து, அக் கிளையைப் பிடுங்கி எறியும்படி கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தனர்.

பின்னர், உணவுகொள்ளச் சென்ற குண்டலகேசி மீண்டும் திரும்பி வந்தபோது தான் நட்ட நாவல் வீழ்த்தப் பட்டிருந்ததைக் கண்டு, அதனை வீழ்த்தியவர் அருகிலிருந்த சாரிபுத்தர் என்பதனையறிந்து, அவ்வூர்ப் பெரியோரை அழைத்து அவை கூட்டச்செய்து, சாரிபுத்தருடன் வாதம் செய்யத் தொடங்கினாள். நெடுநேரம் நடைபெற்ற வாதத்தில் குண்டலகேசி வினாவிய வினாக்களுக்கெல்லாம் சாரிபுத்தர் விடையளித்தார். பின்னர், சாரிபுத்தர் வினாவிய வினாவுக்குக் குண்டலகேசி விடையிறுக்கத் தெரியாமல் தான் தோற்றேனெனச் சொல்லி, அவர் காலில் விழுந்து வணங்கி, அவரை அடைக்கலம் புகுந்தாள். சாரிபுத்தர் குண்டலகேசியைப் பார்த்து, ''என்னிடம் அடைக்கலம் புகாதே, என்னுடைய குரு புத்தபகவானிடம் அடைக்கலம் புகுவாயாக'' என்று சொல்லி அவளை அழைத்துச் சென்று புத்தரை வணங்கச் செய்தார். புத்தர் அவளுக்கு உபதேசஞ்

செய்து அவளைப் புத்தமதத்தில் சேர்த்தார். இதுவே குண்டலகேசி என்னும் தெரிவையின் வரலாறு.

இந்தக் குண்டலகேசி என்பவள் சமயவாதம் செய்யப் புறப்பட்டுச் சைனம், வைதீகம் முதலான சமயங்களைத் தருக்கமுறையாகக் கண்டிப்பதாக இயற்றப்பட்டதுதான் குண்டலகேசிக் காப்பியமென்பது.

9. நீலகேசி

இந்நூல் சைனமதக் கொள்கைகளை விளக்குவது. இந்நூல் செய்தவரின் பெயர் விளங்கவில்லை. இது சிறந்த நூலாகத் தமிழ்மக்களால் பயிலப்பட்டதெனத் தெரிகிறது. இதன் வரலாற்றுச் சுருக்கம் வருமாறு:

பாஞ்சால தேசத்தில் சமுத்திரராசன் என்னும் வேந்தன் பண்டாரவார்தனா என்னும் நகரிலிருந்து செங்கோலோச்சி னான். நகர்ப்புறத்தே பழவாலயம் என்னும் சுடலை யிருந்தது, அங்குக்காளிகோயில் ஒன்று உண்டு. அதன் அண்மையில் சந்திர முனி என்னும் சைனமுனிவர் ஒருவர் வாழ்ந்திருந்தார்.

ஒருநாள் நகர மாந்தர் காளிக்குப்பலியிடும் பொருட்டு விலங்குகள் பலவற்றைக் கொண்டு சுடலையிலுள்ள காளிகோயிலுக்குச் சென்றனர். பிற உயிர்களுக்குத் துன்ப மிழையாமையை மேற்கொண்ட சைன முனிவர் நகர மாந்தரை நோக்கி, அவர்கள் பெருந்திரளான விலங்கு களைப் பலியிடக் கொண்டு வந்திருப்பதன் காரணத்தை வினவினார்.

அவர்கள், ''இத் தேவியின் அருளால் அரசி, பட்டத்துக் குரிய குமாரனை ஈன்றாள். ஆதலின், இவ்விலங்குகளை எல்லாம் பலியிடும் பொருட்டுத்தேவியின் திருமுன்பு கொண்டுவந்திருக்கின்றோம்'' என விடைபகர்ந்தனர்.

இதனைச் செவிக்கொண்ட முனிவர் அம்மாந்தரை நோக்கி, ''உயிர்கள் தாம் முற்பிறப்பில் புரிந்தவினைகளின் காரணமாகப் பிறவிகள் எடுக்கின்றன. இந்நிகழ்ச்சியில் தெய்வங்களால் ஆன வல்லமை எதுவும் இல்லை. இராசகுமாரன் பிறந்ததன் பொருட்டு நீவிர் கொடுக்கும் விலங்கின் பலியை ஏற்று இத்தெய்வம் மகிழுமாயின், அது, மிருக வடிவமாக மண்ணினாற் செய்த பிரதிமைகளையும் பலியேற்று மகிழுமன்றோ? இம்முறை இரத்தம் சிந்தும் கொடிய கொலையின்றிச் செய்யப்படும் அன்பு நிறைந்த வழிபாடாகும்'' எனப்போதித்தார்.

சந்திரமுனிவர் உயர்வுடையதும் தூய்மையானதுமான வழிபாட்டு ஒழுங்கைக் கூறக்கேட்ட மக்கள், தாம் பலியிடும்பொருட்டுக் கொண்டுவந்த விலங்குகளை விட்டுவிட்டு வீடு திரும்பினர்.

முனிவரின் தரும உபதேசத்தைக்கேட்டு உயிர்ப்பலி கொடாது மாந்தர் அகன்றமையின், காளி வெகுளியுற்றுச் சைன முனிவரை ஒறுக்க நினைவு கொண்டாள். தவம் நிறைந்த சைனமுனிவரை ஒறுக்கும் ஆற்றல் காளிக்கு இல்லாமல் இருந்தது. ஆகவே, அவள் சிறு தெய்வங் களுக்குத் தலைமை தாங்கிய நீலகேசி என்னும் தெய்வ அணங்கின் துணையை நாடினாள்.

நீலகேசி காளியின் வேண்டுகோளுக்கிணங்கிச் சந்திர முனிவர் வாசஞ்செய்யும் சுடலையை அடைந்து அஞ்சத்தக்க வடிவங்கொண்டாள். யோகத்தில் அமர்ந்திருந்த முனிவர் இதனால் அச்சங்கொண்டாரல்லர். முனிவரைப் பணிய வைக்குமாறு எடுத்துக்கொண்ட இம்முயற்சி பயனற்றுப் போகவே அவள் அமைதியான இன்னொரு முறையினால் முனிவரைப் பணியவைக்க நினைத்தாள்.

அவள் காமலேகை என்னும் இராசகுமாரிபோல் வடிவங் கொண்டு தன்னை அழகிய ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு முனிவரின் அரியதவத்தைக் கெடுக்குமாறு அவர் முன்நின்றாள். முனிவர் தமது யோக வலியினால் அவள் யார் என்பதை அறிந்தார். அவர் நீலகேசியை நோக்கி, "நீ இராசகுமாரியல்லை நீ, நீலகேசி என்னும் அணங்கு" என்றார்.

நீலகேசி தன் முயற்சி பயனளிக்கவில்லை எனக் கண்டாள்; முனிவர் தன்னை யார் என அறிந்து கூறும் வல்லமையை அளித்தயோகத்தின் பெருமையாற் கவரப்பட்டாள்.

அவள் மன்னிப்புக் கேட்கும் குரலில் "யான் உமது யோக வலியினால் தோற்கடிக்கப்பட்டேன்" எனக் கூறித் தனக்குத் தருமம் அறிவுறுத்தும்படி முனிவரை வேண்டினள்.

முனிவர் நீலகேசிக்குத் தருமம் அறிவுறுத்தினார். நீலகேசி, மற்றத் தேவர்களிலும் கீழான நிலைமையில் இருப்பதையும், மற்றவர் வெறுத்துத்தள்ளும் செயல் களுக்குத் தலைமை தாங்கியிருப்பதையும் அவர் எடுத்துக் கூறினார்.

இந் நீலகேசி பல சமயத்தவர்களோடு வாதப்போர் செய்து வென்று சைனமதத்தை நிலைநாட்டினாளாகச் செய்யப் பட்ட நூல் நீலகேசி எனப்படும். இது தமிழிலுள்ள ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்று. ஐஞ்சிறு காப்பியங்க ளாவன: பெருங்கதை, சூளாமணி, யசோதரகாவியம், நாககுமாரகாவியம், நீலகேசி என்பனவாகும்.

10. கொங்குவேள்

இவர் கொங்கு நாட்டிலே பிறந்தவர்; வேள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். சைனமதத்தினர். இவர் செய்த நூல் உதயணண் கதை எனப்படும். உதயணன் கதைக்குப் பெருங்கதை என்பதும் மற்றொரு பெயர். உதயணன் கதை சீவகன் கதையைப் போன்றதோர் கற்பனைக்கதை. கொங்குவேள் திருத்தக்கதேவரை ஒப்பத் தமிழ்ப் புலமையிற் றேறியவர். பெருங்கதை சீவகன் கதையைப் பலவாறு ஒத்திருக்கின்றது. படிப்பவருக்கும் கேட்பவருக்கும் இன்பம் அளிக்கும் முறையில் கொங்குவேள் கதையை அமைத்துக் கூறுவதில் மிகத்திறம் படைத்தவர் உதயணன். கதையின் சுருக்கம் வருமாறு:

கௌசாம்பி நகரைச் சதானிகன் என்னும் அரசன் ஆண்டான். அவனுக்கு மிருகாபதி என்னும் மனைவி இருந்தாள். அவள் கருப்பம் எய்தியிருந்தபோது ஒரு நாள் சிவந்த ஆடை உடுத்துக்கொண்டு நிலா முற்றத்திலே இரவிற்றூங்கினாள். மேலே பறந்து சென்ற சிம்புள் என்னும் பறவை இறைச்சி என நினைந்து அவளைத் தூக்கிக்கொண்டு

ஆகாய வெளியிற் பறந்தது. அது விபுலகிரி என்னும் மலையில் அவளை வைத்தபோது அவள் கண்ணைத் திறந்தாள். பட்சி தான் இறைச்சியெனக் கொண்டு வந்தது பெண்ணாக இருப்பது கண்டு அதனைவிட்டுப் பறந்து போயிற்று. விடியற்காலையில் உதயணன் பிறந்தான். அம் மலையில் தவஞ்செய்து கொண்டிருந்த உதயணனின் தாயின் தந்தையாகிய பாட்டன் அவனை வளர்த்துவந்தான். உதயணன் அம்மலையில் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவரின் புதல்வனாகிய யூகி என்னும் பிராமணச் சிறுவனுடன் கல்வி பயிற்றப்பட்டான். உதயணன் பல வித்தைகளைப் பயின்றான். இவன் யாழ் வாசிப்பதில் மிகவும் திறமையடைந்தான். இவன் யாழ் ஓசையைக்கேட்ட தெய்வ உலகத்துயானை ஒன்று இவனுக்கு வசப்பட்டது. தனக்கு உணவு வைக்குமுன் அவன் உணவருந்தினால் அஃது அவனைவிட்டுப் போய்விடுவதாகக் கூறிற்று. அவன் அவ்வாறு செய்து வந்தான். இந்த யானையின் உதவியால் அவன் தன் தந்தையின் இராச்சியத்தைப் பெற்று அரசாண்டு வந்தான். ஒருநாள் இவன் யானைக்கு உணவுவைக்க மறந்து உணவு கொண்டான். உடனே அஃது அவனை விட்டுப் போய்விட்டது. உதயணன் அந்த யானையைத் தேடிக் காடுகளில் அலைந்து திரிந்தான். அப்பொழுது அவனுக்கு எதிரே ஒரு மாய யானை வந்தது. அது தோற்றத்தில் உதயணன் யானை போன்றது. அஃது ஓர் இயந்திர யானை; அதன் வயிற்றுள் போர் வீரர் பலர் மறைந்திருந்தனர். இது தனக்குத் திறைகொடுக்காத உதயணனைப் பிடிப்பதற்கு உஞ்சை அரசனாற் செய்யப்பட்ட சூழ்ச்சியாகும். இயந்திரயானையுள் மறைந் திருந்த வீரர் உதயணனைச்

சிறைப்படுத்தி உஞ்சைக்குக் கொண்டு சென்றார்கள். இதனைக் கேள்விப்பட்ட உதயணனின் நண்பனாகிய யூகி பழிக்குப்பழி வாங்குவதாகச் சபதஞ் செய்தான்.

அவன் மாறுவேடம் பூண்ட பல வீரரை உஞ்சைக்கு அனுப்பினான்; அவனும் அந் நகருக்குச் சென்றான். ஒருநாள் அவன் பட்டத்து யானைக்கு யாதோ மருந்தைக் கொடுத்தான். யானை மதங் கொண்டு பலரைக் கொன்றது. உஞ்சை அரசனாகிய பிரச்சோதனன் உதயணனை அழைத்து யானையின் மதத்தை அடக்கும்படி சொன்னான். அவன் யாழை வாசித்ததும் யானை மதம் அடங்கி அவன் முன் பணிந்து நின்றது. அரசன் மகிழ்ச்சி எய்தி அவனைத் தன் குமாரத்தி வாசவதத்தைக்கு யாழாசிரியனாகவும், புதல்வருக்கு வில்லாசிரியனாகவும் நியமித்தான். ஒருநாள் கடலாடும் விழா நடந்தது. அப்பொழுது யூகியின் எண்ணங்களை மாறுவேடத்துடனிருந்த வயந்தகன் என்னும் உதயணன் நண்பன் அவனுக்குச் சொன்னான். உதயணன் வாசவதத்தையை யானைமீது ஏற்றிக் கொண்டு தன் நகரை அடைந்து அங்கே அவளை மணஞ்செய்தான். இன்னும் அருஞ்செயல்கள் பல புரிந்து பெரும் புகழ் ஈட்டியபின் அவன் உலக இன்பங்களை வெறுத்துத் துறவு பூண்டான்.

11. பவணந்தி

பவணந்தி முனிவர் காஞ்சிபுரத்துக்கு அயலிலுள்ள சனகாபுரத்திற் பிறந்தவர். இவரின் தந்தை சன்மதி முனிவர். மைசூரிலே கோலார் நாட்டின் அரசனாகிய சீய கங்கனின் (கி.பி.1205) கருத்துக்கிணங்கி இவர் நன்னூல் என்னும்

இலக்கண நூல் செய்தார். பவணந்தி முனிவர் சைன மதத்தினர். தொல்காப்பியத்துக்கு அடுத்தபடியில் நன்னூல் சிறந்த இலக்கணமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. இந் நூற்பாயிரத்தில் அக்கால மாணாக்கர் எவ்வாறு ஆசிரியருக்கு அடங்கி நடந்தார்கள். ஆசிரியன் எவ்வாறு அவர்களுக்குக் கல்வி கற்பித்தான் என்பனபோன்ற அரிய செய்திகள் பல கூறப்பட்டுள்ளன. இந் நூலுக்குச் சங்கர நமச்சிவாயர் என்னும் பிற்காலப் புலவர் ஒருவர் விருத்தியுரை செய்தார். பிற்காலத்தில் பலர் இதற்கு உரை எழுதியுள்ளார்கள். அவைகளுள் ஆறுமுக நாவலர் செய்த காண்டிகை உரை மிகச் சிறப்புடையதாகக் கொள்ளப்படுகின்றது. நன்னூலுக்குப் பின் பல தமிழ் இலக்கணங்கள் தோன்றியபோதிலும் அவை நன்னூலை ஒத்த மதிப்புப் பெறவில்லை.

12. கச்சியப்ப சிவாசாரியார்

இவர் காஞ்சிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்; ஆதிசைவப் பிராமண குலத்தினர். தமிழ், சமக்கிருதம் என்னும் இரு மொழியிலும் வல்லுநர். இவர் காஞ்சிபுரத்திலுள்ள குமரகோட்டம் என்னும் கோயிலில் அர்ச்சகராக இருந்தார்; சிவசங்கர சங்கிதை என்னும் வடமொழி நூலைத் தழுவி கந்தபுராணம் என்னும் நூலைப் பாடினார். இதில் 10346 பாடல்கள் உள்ளன. கந்த புராணம் முருகக் கடவுளின் பெருமைகளை எடுத்துக் கூறுகின்றது. இது பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களில் ஆண்டுதோறும் படித்துப் பொருள் சொல்லப்பட்டு வருகின்றது. இந்நூல் பதினோராம் நூற்றாண்டின் மத்தியிற் செய்யப்பட்டதாகும்.

13. சேக்கிழார்

சேக்கிழார் குன்றத்தூரிலே வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவரின் இயற்பெயர் அருண்மொழித் தேவர். சேக்கிழார் என்பது வேளாண் மரபினரின் ஒரு குடிப்பெயர். அருண்மொழித் தேவராகிய இவர் சேக்கிழார் குலத்தவர் ஆதலின் குலப்பெயராலேயே அழைக்கப்படுவாராயினர். இவர் அனபாய சோழன் என்னும் அரசனின் மந்திரியாக இருந்தார். இவ்வரசன் கி.பி.1064-க்கும் கி.பி.1113-க்கு மிடையில் ஆட்சிபுரிந்தார் அக்காலத்தில் மக்கள் பெரிதும் விரும்பிச் சைன நூலாகிய சீவகசிந்தாமணியைப் பயின்று வந்தார்கள்.' அதனால் அரசனுக்கும் மக்களுக்கும் சைனமதப்பற்று உண்டாவதாயிற்று. ஆகவே சேக்கிழார் சிந்தாமணிக்கு மாறாக மக்கள் பயிலும்படி பெரியபுராணம் என்னும் நூலைச் செய்தார். பெரியபுராணம் சொற்சுவை பொருட்சுவை செறிந்த நூல். அக்காலத்தில் சைவ அடியார்களைப்பற்றிக் கன்னபரம்பரையாகவும் பிறவாறும் வழங்கிய வரலாறுகளை எல்லாம் இயன்றவரை தொகுத்து இவர் பெரியபுராணத்தைச் செய்துள்ளார் என விளங்கு கின்றது. பெரிய புராணத்துக்குத் திருத்தொண்டர் புராணம் என்பதும் இன்னொரு பெயர். இதில் 4286 பாடல்கள் உள்ளன. மற்றைய புராணங்கள் வடமொழி நூல்களிலிருந்து பெயர்க்கப்பட்டவை எனப்படுகின்றன. இஃது அவ்வாறில் லாமை கருத்திற்கொள்ளத்தக்கது.

14. ஔவை

ஔவை என்னும் பெயருடன் இரு வேறு காலங்களில் இரு பெண் புலவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களுள் ஒருவர் சங்க காலத்தவர். கம்பன் காலத்தில் ஔவையார் என்னும் பெயருடன் இன்னொருவர் வாழ்ந்தார். இன்று பள்ளிச்சிறார் பயிலும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்களைச் செய்தவர் இவரேயாவர். இவர் மிக முதுமைக்காலம் வரையில் வாழ்ந்தவர் ஆதல் வேண்டும். ஔவை என்னும் சொல் இன்று முதியவள் என்னும் பொருள் தருவதால் இஃது அறியப்படுகின்றது. ஔவையார் செய்த நூல்களை மேல் நாட்டினரும் பெரிதும் பாராட்டி அவைகளை ஆங்கிலம், செர்மனியம், டச்சுமொழிகளில் மொழிபெயர்த்துள்ளார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் ஔவையார் இருந்தார் என்னும் கன்னபரம்பரைக் கதையுண்டு. கம்பர், ஒட்டக்கூத்தர் முதலியவரின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். சுந்தரமூர்த்தி சுவர்மிகள் காலத்தில் ஔவையார் ஒருவர் இருந்தாராயின் அவர் இன்னொரு ஔவையார் ஆகலாம்.

15. கம்பர்

கம்பரின் பிறப்பு, வளர்ப்பு முதலிய வரலாறுகள் மறை வாயிருக்கின்றன. கம்ப நாட்டிற்பிறந்தமையின் இவருக்குக் கம்பன் என்னும் புனை பெயர் வழங்கிற்று எனக்

கருதப்படுகின்றது. பிற்காலத்தவர்கள் சிலர் கம்பு என்பதைக் கம்பம் பயிர் எனப்பொருள் கொண்டு கம்பன் என்னும் பெயர்க் காரணத்தை விளக்கக் கற்பனைக் கதைகள் பல புனைந்துள்ளார்கள். கம்பன் காளியின் அருளைப் பெற்றுக் கவிபாடும் திறமை அடைந்தான் என்னும் கதை வழங்குகின்றது. இதனால், கம்பன் காளியைக் குலதெய்வமாகக்கொண்டு வழிபட்டான் என நாம் 'உய்த்தறியலாம். கம்பனுக்கு இயற்கையாகவே கவிபாடும் ஆற்றல் உண்டாயிருத்தல் வேண்டும். அவனைக் கண்ட மக்கள் காளியின் வரத்தினால் அவன் அவ்வாற்றலைப் பெற்றான் என நினைத்தார்கள் ஆகலாம். கம்பனைச் சடையப்ப வள்ளல் என்னும் வேளாண் செல்வர் ஒருவர் ஆதரித்துவந்தார். கம்பனின் பாடல்கள் படிக்குந்தோறும் மனத்தைக் கவரும் வன்மையுடையன. கம்பன் பாட்டைப் புகழாத புலவர்கள் இல்லை. கம்பர் செய்த நூல்கள் இராமாயணம், சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, ஏரெழுபது முதலியன.

16. ஒட்டக்கூத்தர்

ஒட்டக்கூத்தர் செங்குந்த மரபினர். இவரின் பிறப்பு வளர்ப்பு முதலியன அறியப்படவில்லை. இவர் கம்பர் காலத்தவர்; இராமாயணத்தின் உத்தரகாண்டம் செய்தவர். இவர் செய்த நூல்கள், தக்கயாகப்பரணி, ஈட்டி எழுபது முதலியன. இவர் வெட்டிக் குவிக்கப்பட்ட பச்சிளஞ் சிறுவரின் தலைகளைச் சிங்காதனமாக அடுக்கி அதன் மீதிருந்து 'ஈட்டி எழுபது' பாடினார் என்னும் ஒரு கதை

வழங்குகின்றது. அதற்குச் சான்றாகப் பாடல் ஒன்றும் காணப்படுகின்றது. இவ்வரலாறு வெறுங் கற்பனையே யன்றி வேறல்ல. இவ்வரலாறு முற்காலத்தவரின் கதை சொல்லும் போக்கை விளங்கிக் கொள்வதற்கு ஏற்ற நல்ல எடுத்துக்காட்டாகும்.

17. புகழேந்தி

புகழேந்தி செங்கல்பட்டுக்கு அண்மையிலுள்ள களத்தூரிற் பிறந்தார். இவரின் தாய் தந்தையரைப்பற்றி யாதும் அறியப்படவில்லை. இவர் வேளாளவகுப்பைச் சேர்ந்தவரெனக் கருதப்படுகிறார். வெண்பாப் பாடுவதில் இவர் திறமை பெற்றிருந்தார். இவராற் பாடப்பட்ட நளவெண்பா மிகவும் சொற்சுவை பொருட்சுவை செறிந்தது. புகழேந்தி புலவர், ஒட்டக்கூத்தர், கம்பன், ஔவையார் முதலியோர் ஒரே காலத்தவர்கள் எனப்படுகின்றனர்.

முக்கிய காலக் குறிப்புகள்

சங்க காலம் சிறிது ஏறத்தாழ

கி.மு. 1000 முதல் கி.பி 300 வரை

தொல்காப்பியம்	கி.மு.	350
சங்க நூல்கள்	கி.மு.	350-கி.பி. 300
திருக்குறள்	கி.மு.	100
சிலப்பதிகாரம்	கி.பி.	180
மணிமேகலை	கி.பி.	180
இலங்கைக் கயவாகு	கி.பி.	173-195
சேரன் செங்குட்டுவன்	கி.பி.	173-195
திருநாவுக்கரசர்	கி.பி.	7ம்நூற்றாண்டு
திருஞான சம்பந்தர்	கி.பி.	7ம்நூற்றாண்டு
சுந்தரர்	கி.பி.	9ம்நூற்றாண்டு
சிந்தாமணி	கி.பி.	9ம்நூற்றாண்டு
சூளாமணி	கி.பி.	9ம்நூற்றாண்டு
உதயணன் கதை	கி.பி.	9ம்நூற்றாண்டு
பட்டினத்தடிகள்	கி.பி.	10ம்நூற்றாண்டு
அமிதசாகரர்	கி.பி.	1095-1113
அடியார்க்கு நல்லார்	கி.பி.	1100-1141
கம்பர்	கி.பி.	12ம் நூற்றாண்டு

ஒட்டக்கூத்தர்	கி.பி.	12ம் நூற்றாண்டு
பவணந்தி முனிவர்	கி.பி.	12ம் நூற்றாண்டு
நம்பி திருவிளையாடல்	கி.பி.	12ம் நூற்றாண்டு
இளம்பூரணர்	கி.பி.	12ம் நூற்றாண்டு
பேராசிரியர்	கி.பி.	12ம் நூற்றாண்டு
நச்சினார்க்கினியர்	கி.பி.	12ம் நூற்றாண்டு
பரிமேலழகர்	கி.பி.	12ம் நூற்றாண்டு
அதிவீரராம பாண்டியன்	கி.பி.	16ம் நூற்றாண்டு
வில்லிபுத்தூரார்	கி.பி.	16ம் நூற்றாண்டு
அருணகிரிநாதர்	கி.பி.	16ம் நூற்றாண்டு
இரட்டையர்	கி.பி.	16ம் நூற்றாண்டு
காளமேகப்புலவர்	கி.பி.	16ம் நூற்றாண்டு
தாயுமானவர்	கி.பி.	1608-1644
வீரமாமுனிவர்	கி.பி.	1680-1746
இராமலிங்க சுவாமிகள்	கி.பி.	1823-1874
பேராசிரியர் சுந்தரம் பிள்ளை	கி.பி.	1855-1907
டாக்டர் போப்பையர்	கி.பி.	1820-1907